# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 46 — 1973 පෙබරවාරි 09 වැනි සිකුරාදා — 1973.02.09

46 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 117 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 133 |


*கவனிக்க.—நீதிமன்றங்களின் மொழி (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் 1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ந் திகதிய ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறை நிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

## பதவிகள் — வெற்றிடம்

### "ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

*1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டாலொழிய, வாடகைப்படி தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பது அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழித்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத விதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத விதத்தையோ அத்தோடு மேலும் 5 சத விதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத விதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்மென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கெனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துமிபத்தின் எப் பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு, நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.*

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவோர் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.*

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. பொ. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறு*

---

#### முக்கிய அறிவித்தல்

*ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.*

---

வதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்கள் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழி மூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பன வற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றேவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8 தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

இல. வெ. மு/2/237.

கல்வி அமைச்சு

எகிப்து, அரபுக் குடியரசால் வழங்கப்படும் புலமைப் பரிசில் 1972/73

எகிப்து, அரபுக் குடியரசால் பின்வரும் கற்கைத் துறைகளில் வழங்கப்படும் பட்டப்பின் புலமைப் பரிசில்களை அளித்தற் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

(அ) இஸ்லாம் சட்டம்

(ஆ) இஸ்லாம் வேதசாத்திரங்களும் வரலாறும்

(இ) அரபுமொழியும் இலக்கியமும்

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1.—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச் சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு 2.—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

குறிப்பு 3.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. கால எல்லை.—புலமைப் பரிசில்கள் சாதாரணமாக ஒரு வருட கால அளவினதாகும் (கால அளவு நீடிக்கப்படக்கூடும்) எனினும், துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களைவிட்டு எகிப்து, அரபுக் குடியரசு அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. தகவுத்திறன்.—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும் :—

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1972.12.31 அன்று 28 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) அங்கிகரிக்கப்பட்ட மதரசாக்களைச் சேர்ந்தவர்களான கற்பித்தலில் ஈடுபட்டுள்ள மௌலவிகளாக அல்லது அரபு மொழியை ஒரு பாடமாக எடுத்துள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரிகளாக இருக்க வேண்டும்.

குறிப்பு 1.—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 31.12.72 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

குறிப்பு 2.—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையவராகார். படிவத்தின் 15(ஈ) ஆம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. அளிப்பு நிபந்தனைகள்.—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க் காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) எகிப்து, அரபுக் குடியரசுக்குப் போய்த் திரும்புதற்கான சுற்றுப்பயணத்தார் வகுப்பு விமானப் பிரயாணச் செலவு ;

(ஆ) மாதாந்தச் சகாயப்படி ;

(இ) இலவச உறையகம்.

குறிப்பு.—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியாபகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. நேர்முகப் பரீட்சை.—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடரில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்விதச் செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின் போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

6. உடன்படிக்கை.—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், எகிப்துக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப் பட வேண்டியது) ஸ்ரீலங்கா குடியரசின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக ஸ்ரீலங்கா குடியரசுக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்த வரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) ஸ்ரீலங்கா குடியரசுக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. வைத்தியப் பரீட்சை.—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் எகிப்தில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேறவேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால், அரசாங்க உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில், கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார். ஏனையோரைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து திரும்பியதும் அவர்களுக்கு உத்தியோகம் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்டபின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப் படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்து கொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் 1973.2.24 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தன்து பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு-2,
1973.1.29.

2-290—09.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46

---

### பொதுத் திறைசேரி

### உதவிப்பணிப்பாளர் பகுதி (கூட்டுத்தாபனப் பகுதி)

பொதுத் திறைசேரியின் கூட்டுத்தாபனப் பகுதியில் ஈர் உதவிப் பணிப்பாளர் பதவிகட்கு விண்ணப்பங்கள் வரவழைக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் எழுதப்பெற்று செயலாளர், நிதி அமைச்சு (மத்திய கிளை) அ.பெ. இலக்கம் 500, கொழும்பு 1 என்ற முகவரியுடன் 1973.3.1 ஆந் தேதிக்குப் பிந்தாமல் அவர் பெறக்கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும். உறையின் வலது பக்க மேல்மூலையில் "உதவிப் பணிப்பாளர், கூட்டுத்தாபன பகுதி" எனத் தெளிவாகக் குறிப்பிடப் பட்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு.—விண்ணப்பப்படிவம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகி விட்டதெனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

2. சம்பளமும் படிகளும்—(அ) நிரந்தர, உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற அடிப்படையில் ஆண்டுக்கு 11,040 ரூபா—11—480—16,320 ரூபாவும் மணமானவர் படியும், அல்லது

(ஆ) தற்காலிகச் சேவைமாற்றம் பெற்ற கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களுக்குக் கூட்டுத்தாபனச் சம்பளம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் அவரின் தகைமைக்கும் அனுபவத்திற்குமேற்ப சம்பளத்திட்டத்தில் ஏற்ற நிலையில் வைக்கப்படுவர்.

3. தகைமைகள்.—அபேட்சகர் ஒவ்வொருவரும்—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையவரென்பதற்கும்;

(ஆ) 1973.3.1 ஆந் தேதியில் 23 வயதுக்குக் குறையாமலும் 3 வயதுக்கு மேற்படாமலும் உள்ளவெரென்பதற்கும் திருப்திகரமான சான்றளித்தல் வேண்டும். (ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மேலெல்லை வயது பொருந்தாது).

கல்வித் தகைமைகள்.—

(1) இலங்கை/இங்கிலாந்து/வேல்சுத் தத்துவம் பெற்ற கணக்காளர் கழகத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தி ; அல்லது

(2) இங்கிலாந்துச் செலவு, வேலைக் கணக்காளர் கழகத்து உறுப்பினர்.

பின்வரும் துறைகள் எவற்றிலும் அரசாங்கத் திணைக்களம் பெரிய கைத்தொழில் அல்லது வர்த்தக முயற்சியொன்றில் நிருவாகக் கட்டத்தில் தகைமைக்குப் பின்னர் அனுபவம் பெற்றிருத்தல் நன்மை பயப்பதாகும் :

(1) நிதி நிருவாகம், பரிசீலனையும் முகாமையும்,

(2) கணக்கிடல், செலவுக் கணக்கு, முகாமை முறைகள் தயாரித்தல்,

(3) திட்டப் பரிசீலனையும் மதிப்பிடலும்.

4. பரீட்சார்த்திகள் பின்வரும் சாதனங்கள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கப்படும்போது அவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்:—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) உயர் தொழிற்றகைமையும் அத்துடன்/அல்லது தொழினுட்பத் தகைமையும் பற்றிய சான்றிதழ் ;

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தலாகாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

5. அரசாங்கச் சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும்.

6. விண்ணப்பப்படிவங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத்தொடர்புகளையும் செயலாளர், நிதி அமைச்சு என முகவரியிட்டனுப்பவேண்டுமேயன்றி, இவ்வமைச்சிலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நியந்தனைகள் இந்தச் செய்திமடலின் I ஆந் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

சி. ஏ. குரே,
செயலாளர்,
நிதி அமைச்சு.

நிதி அமைச்சு,
அ. பெ. இலக்கம் 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1973 சனவரி மாதம் 30 ஆந் தேதி.

விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பிக்கும் பதவி :————.

2. முழுப் பெயர் (பெரிய எழுத்தில்) :————.

3. அஞ்சல் முகவரி :————.

(முகவரியில் ஏற்படும் மாற்றமெதுவும் உடனடியாக அறிவிக்கப்படவேண்டும்).

4. பிறந்த திகதி :————.

ஆண்டு:————. மாதம்: நாள் ————.

5. விண்ணப்ப முடிவு தேதியில் திட்டமான வயது :————.

ஆண்டுகள் :————. மாதங்கள் :————. நாட்கள் :————.

6. இலங்கைக் குடியா என்பது? மரபுவழியாகவா பதிவு வழியாகவா என்பதைக் கூறுக. (1) ஆம் இலக்க குறிப்பைப் பார்க்க).

7. பின்வருவோர் பிறந்த இடம் :————. ((2) ஆம் இலக்க குறிப்பைப் பார்க்க)

(அ) விண்ணப்பதாரர் :————.

(ஆ) அவரின் தந்தை :————.

(இ) தந்தைவழிப் பாட்டனர் :————.

(ஈ) தந்தைவழிப் பூட்டனர் :————.

8. (அ) பால் :————.

(ஆ) மணமானவரா, தனியானவரா, வாழ்விழந்தவரா:——

9. (1) சிங்களம்

(2) தமிழ்

(3) ஆங்கிலம்

ஆகியவற்றில் சித்திபெற்ற உயர்ந்த பரீட்சைகள்.

(1)
(2)
(3)

10. பல்கலைக்கழக, உயர்தொழில், தொழினுட்ப தகைமைகள் :

(பெற்றுள்ள பட்டங்கள், சிறப்புச்சித்தி, உயர்தொழில் அத்துடன்/அல்லது தொழினுட்ப தகைமைகள் யாவற்றையும் அவற்றைப் பெற்ற தேதி, வகுப்பு (எதுவுமுண்டானால்), எடுத்த பாடங்கள், கழகத்தின் பெயர் ஆகியவற்றுடன் விரிவாகக் கூறுக.)

11. இப்பொழுது வகிக்கும் பதவியும் முந்திய நியமனங்கள் எதுவுமுண்டானால் அவையும் வேலையிலமர்த்தப்பட்ட தேதி, விலகிய தேதி, கடைசியாகப் பெற்ற ஆண்டுச் சம்பளம் யாவும் குறிப்பிடப்படல் வேண்டும்.

முக்கிய குறிப்பு.—அரசாங்கத்தின் கீழ் தொழிலிருந்து விலகிய காரணம் 13 ஆம் கூட்டில் கூறப்படல் வேண்டும்.

| | பதவி | இருந்து | வரை | ஆண்டுச்சம்பளம் |
|---|---|---|---|---|
| (1) | | | | |
| (2) | | | | |
| (3) | | | | |
| (4) | | | | |
| (5) | | | | |
| (6) | | | | |
| (7) | | | | |
| (8) | | | | |

12. விசேட தகைமைகள்.—அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள விசேட தகைமைகளை அத்துடன்/அல்லது அனுபவத்தை பெற்றிருக்கிறீரா? அவ்வாறாயின் அவற்றின் முழு விவரங்களையும் தேதிகளுடன் கூறுக. செய்திமடல் அறிவித்தலில் விசேட தேவைகள் எவையும் குறிப்பிடப்பட்டிருந்தால் அவற்றைப் பார்க்க.

13. பிற விவரங்கள் எவையேனும் :————.

14. இந்த விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இதனகத்துள்ள விவரங்களுள் எவையேனும் உண்மையற்றவை அல்லது சரியற்றவையெனக் காணப்பட்டால், தேர்வுக்கு முன்னர் தகைமையற்றவர் ஆவதற்கு ஆளாவேன் என்பதையும் நியமனத்திற்குப் பின்னர் சரியின்மை கண்டு பிடிக்கப்பட்டால் இழப்பீடு எதுவுமின்றித் தள்ளப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரர் கையொப்பம்.

தேதி :————.

2-352—9.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46

## கல்வி அமைச்சு

### அரசாங்க பாடசாலைகளில் முதலாந்தரத் தலைமை ஆசிரியர், இரண்டாந்தரத் தலைமை ஆசிரியர்/சிரேட்ட உதவி ஆசிரியர் பதவிகளுக்குத் தகுதியுடையவர்களைத் தெரிவு செய்தல்

அரசாங்க சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் முதலாந்தரத் தலைமை ஆசிரியர், இரண்டாந்தரத் தலைமை ஆசிரியர்/சிரேட்ட உதவி ஆசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியுடையோர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு 1973 ம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி பரீட்சை ஆணையாளரினால் ஒரு பரீட்சை நடாத்தப்படும். பரீட்சை நடைபெறும் ஸ்தானங்கள் பின்னர் அறிவிக்கப்படும். ஒவ்வொரு கல்விப் பிரதேசத்திலும் பரீட்சை ஸ்தானங்கள் அமைக்கப்படும். பொது நன்மை கருதி இப்பரீட்சையை இரத்து செய்யவோ அல்லது பிற்போடவோ கல்வி அமைச்சு கருதும் பட்சத்தில் அவ்வாறு செய்யும் உரிமை கல்வி அமைச்சுக்குரியது. மேலும், பொது நன்மை கருதி வெற்றிடங்கள் சிலவற்றையோ அல்லது அனைத்தையுமோ நிரப்பாதிருக்கும் உரிமையும் கல்வி அமைச்சுக்குரியது.

2. விண்ணப்பிக்க வேண்டிய முறை :—

(அ) பிரதேச/மாவட்டக் கல்வி அலுவலகங்களிலிருந்து வினியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவங்களை உரிய முறையில் பூரணப்படுத்தி 1973.3.7 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தாம் சேவையாற்றும் பாடசாலை அமைந்துள்ள பிரதேசக் கல்வி அதிபருக்கு/பிரதான கல்வி அதிகாரிக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "*I/ *II ந் தரத் தலைமை ஆசிரியர் பதவி சி*/த*/மு*" என விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடவும். (*தேவையற்ற சொற்களைக் கீறிவிடுக.) குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தபாலில் காணாமற் போனதாகவோ, தாமதமானதாகவோ செய்யப்படும்முறையீடுகள் கவனிக்கப்படமாட்டா. கடைசித் தினங்கள் வரை விண்ணப்பங்களைத் தாமதித்து வைத்துக் கொள்ளுவதால் ஏற்படக்கூடிய நட்டங்களை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) அச்சிடப்பட்ட விண்ணப்பங்களைத் தாம் கடமையாற்றும் கல்விப் பிரதேச/மாவட்டக் கல்விக் காரியாலயங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்களுக்காக விண்ணப்பிக்கும் பொழுது 9"×4" அளவிற்குக் குறையாததும், விலாசமிடப்பட்டதும், முத்திரை ஒட்டப்படாததுமான ஒரு கடித உறை அனுப்பப்படல் வேண்டும். இவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் "விண்ணப்பப்படிவம்—தலைமையாசிரியர் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சை" எனத் தெளிவாகக் குறிக்கப்படல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு படிவத்துக்கு மேல் வினியோகிக்கப்படமாட்டாது.

(இ) ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வெற்றிடங்கள் சார்பாக அவ்அவ் மாவட்டங்களில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். சிங்கள விண்ணப்பதாரிகளைப் பொறுத்தமட்டில் கொழும்பு தெற்கு, ஹோமாகமை, கம்பஹா, களுத்துறை ஆகிய கல்வி மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய கல்வி மாவட்டங்களில் மாத்திரமே வெற்றிடங்கள் உண்டு. தமிழ் விண்ணப்பதாரர்களைப் பொறுத்தமட்டில் யாழ்ப்பாணக் கல்வி மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் வெற்றிடங்கள் உண்டு. எனவே விண்ணப்பப்படிவத்தின் முதலாம் கூட்டில் விண்ணப்பிக்கும் கல்வி மாவட்டத்தைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். இதனை எக்காரணங்கொண்டும் பின்னர் மாற்றஞ் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படுவோர் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் குறைந்தபட்சம் மூன்று வருடங்களேனும் கடமையாற்ற வேண்டும்.

3. சம்பள விகிதம் :—

3.1. முதலாந் தரத் தலைமை ஆசிரியர் பதவிகள் :—

வருடமொன்றுக்கு ரூபா 3,720—8 × 90—11 × 144—6,024 (ஒன்று திரட்டிய சம்பளம்.)
(தகுதிகாண் தடை 4,872 க்கு முன்னர்.)

1969.10.1 க்கு முன்னர் செல்லுபடியாகவிருந்த, இதற்குச் சமமான சம்பளம்.

வருடத்துக்கு ரூபா 1,560—10×72—9×120—3,360. (தகுதிகாண் தடை ரூபா 2,400 க்கு முன்னர்.)

குறித்த அளவிலான விவாகப்படி வழங்கப்படும்.

தகுதிகாண் தடையில் சித்தியடைவதற்காக சேவைக்காலப் பயிற்சி நெறிகள் ஐந்தில் பங்குபற்ற வேண்டும்.

3.2. இரண்டாந்தரத் தலைமை ஆசிரியர்/சிரேட்ட உதவி ஆசிரியர் பதவிகள் :—

வருடமொன்றுக்கு ரூபா 3,450—11×90—9×144—5,734. (ஒன்று திரட்டிய சம்பளம்.)
(தகுதிகாண் தடை ரூபா 4,548 க்கு முன்னர்.)

1969.10.1 க்கு முன்னர் செல்லுபடியாகவிருந்த, அதற்குச்சமமான சம்பள விகிதம்.

வருடத்துக்கு ரூபா 1,308—11×72—9×120—3,180. (தகுதிகாண் தடை ரூபா 2,220 க்கு முன்னர்.)

குறித்த அளவிலான விவாகப்படி வழங்கப்படும்.

தகுதிகாண் தடையில் சித்தியடைவதற்காக சேவை காலப் பயிற்சி நெறிகள் ஐந்தில் பங்குபற்றல் வேண்டும்.

4. வயதெல்லை.—விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தன்று விண்ணப்பதாரர்களின் வயது 30 வருடங்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும்.

5. கல்வித் தகைமைகளும் வேறு தகைமைகளும் :—

5.1. தலைமை ஆசிரியர் I ஆந் தரம் :—

(அ) அரசாங்க பாடசாலை ஒன்றில் II ஆந் தரத் தலைமை ஆசிரியர் தரத்தில் ஒருவருடச் சேவையுள்ள II ஆந் தரத் தலைமை ஆசிரியர் சிரேட்ட உதவி ஆசிரியர் ஒருவராக,

அல்லது

(ஆ) அரசாங்க பாடசாலையொன்றில் கடமையாற்றும், பயிற்சியின் பின்னர் 8 வருடச் சேவையுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவராக,

அல்லது

(இ) பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரம் பெற்று வருடமொன்றுக்கு ரூபா 3,360 ஒன்று திரட்டிய சம்பளம் பெறும் பயிற்றப்படாத ஆசிரியர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

5.2. II ஆந் தரத் தலைமை ஆசிரியர்/சிரேட்ட உதவி ஆசிரியர் பதவிகள் :—

(அ) அரசாங்க பாடசாலை ஒன்றில் பயிற்சியின் பின்னர் 5 வருடங்கள் கடமையாற்றியுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவராக,

அல்லது

(ஆ) பயிற்றப்படாத ஆசிரியர் தராதரம் பெற்று வருடமொன்றுக்கு ரூபா 3,120 க்கு மேற்பட்ட ஒன்று திரட்டிய சம்பளம் பெறும் பயிற்றப்படாத ஆசிரியர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

5.3. சிறந்த நல்லொழுக்கமும் நல்ல உடல் நலமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் விண்ணப்பதாரர்களுக்கு இருக்க வேண்டிய மிகக் குறைந்த தகைமைகளேயாகும். கற்பித்தல் சம்பந்தமான, அதனோடு தொடர்புள்ள மேலதிக கல்வி—தொழில் தகைமைகள் பெற்றிருப்போர் சார்பாகவும், வெளிவேலைகளில் உற்சாகம் காட்டியவர்கள் சார்பாகவும் நேர்முகப் பரீட்சையின்போது கூடிய கவனம் செலுத்தப்படும்.

(ஆ) உதவி ஆசிரியர்/தலைமை ஆசிரியர் சேவைக் காலத்தைக் கணிக்கும்போது சம்பளமற்ற லீவுக் காலம் கணிக்கப்படமாட்டாது.

6. தெரிவு செய்யும் முறை :—

6.1. போட்டிப்பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலமே தகுதி உடையோர் தெரிவு செய்யப்படுவர். பரீட்சையில் மிகக் கூடுதலான புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களுள், பொதுவாக நிலவும் வெற்றிடங்களின் தொகைக்கு இருமடங்கான தொகைக்குச் சமமான அளவு விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பரீட்சைக்காக இரு 1½ மணித்தியால வினாப்பத்திரங்களும், ஒரு மணித்தியால வினாப்பத்திரமும் கொடுக்கப்படுவதுடன், அவ்வினாப்பத்திரங்கள் பின்வரும் மூன்று பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

(அ) கல்வியின் அடிப்படைக் கொள்கைகளும், முறைகளும் 1½ மணி—150 புள்ளிகள்.

(ஆ) கல்விச் சட்டம், பரிபாலனம், பாடசாலையொன்றில் சம்பளம், பணப்பரிமாற்றம், சாமான்களை வைத்திருத்தல் ஆகியன சம்பந்தமான அறிவு 1½ மணி—150 புள்ளிகள்.

(இ) பொது அறிவு 1 மணி—100 புள்ளிகள்.

6.2. நேர்முகப் பரீட்சைக்காக 50 புள்ளிகள்.

6.3. போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான பரீட்சைக் கட்டணமாக ரூபா 15 பெறுமதியுள்ள முத்திரைகள் விண்ணப்பப் படிவத்தில் ஒட்டப்படல் வேண்டும்.

7. சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்.—

7.1. இப்பதவிகள் நிரந்தரமானவை.

7.2. தெரிவு செய்யப்படுபவர்கள் ஒரு வருட பதில் கடமைபுரியும் காலத்துக்கு உட்படுத்தப்பட்டே புதிய பதவியில் அமர்த்தப் படுவர். பதவி நிரந்தரமாக்கப்பட்டதன் பின்னர், நிதிப் பிரமாணங்களுக்கு அமைய அவரவர் பதவி உயர்ச்சி பெற்ற திகதியிலிருந்து உரிய சம்பளத் திட்டத்தில் வைக்கப்படுவர்.

7.3 அரச கரும மொழிக் கொள்கையைச் செயல்படுத்துவதற்காகவும், விசேடமாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கரும மொழிச் சட்டத்திட்டங்களை அமுல் நடத்துவதற்காகவும், தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள, இதன் பின்னர் ஏற்படுத்தப்படவுள்ள நிபந்தனைகளுக்கும், அரசாங்க சேவைக் கமிசன் சபையின் சட்ட திட்டங்கள், நிதிப்பிரமாணம், கல்விச் சட்டக் கைநூல், அரசாங்கத்தால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் சட்டதிட்டங்கள், கட்டளைகள் ஆதியனவற்றுக்கும், அமையத் தெரிவு செய்யப்படுவோர் செயல்படுதல் வேண்டும்.

7.4. ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வெற்றிடங்களுக்கு அமையவே தெரிவு நடைபெறும். நியமனம் பெறுபவர்களுக்கு 3 வருடங்கள் செல்லும் வரை இடமாற்றம் பெறும் உரிமை கிடையாது. எனினும் ஒழுங்கு நடவடிக்கை காரணமாகவோ அல்லது சேவையின் தேவையைப் பொறுத்தோ வேறு மாவட்டம் ஒன்றுக்கு இடமாற்றம் செய்யும் உரிமை திணைக்களத்தைச் சார்ந்தது.

8. பரீட்சைக்கு அனுமதி :—

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளரால் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தத்தமது பிரவேசப் பத்திரங்களைப் பரீட்சை நிலையத்தின் மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். பிரவேசப் பத்திரம் ஒப்படைக்கப்படாத விண்ணப்பதாரர்களை பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(ஆ) அவரவர்களுக்குக் குறிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபங்களிலேயே அவர்கள் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். விண்ணப்பதாரர்கள் குறிக்கப்பட்ட பரீட்சை நிலையங்களிலல்லாது வேறு பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். விண்ணப்பதாரர்கள் தாம் பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்திலேயே தத்தமது பிரவேசப் பத்திரங்களை நிலைய மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(இ) எந்த ஒரு விண்ணப்பதாரருக்கும் பரீட்சை நடைபெறும் தினத்துக்குக் குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னராவது பிரவேசப் பத்திரம் கிடைக்காத விடத்து, அதுபற்றி அவர் உடனே கொழும்பு 2, தபால் பெட்டி இலக்கம், 1503, பரீட்சை ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டும். (தந்தி விலாசம்—" பரீட்சை " கொழும்பு என்பதாகும்.) அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறுததைப் பரீட்சை ஆணையாளருக்கு அறிவிக்கும் போது பின்வரும் விபரங்களும் கொடுபடல் வேண்டும்.

(i) பரீட்சையின் பெயர்.

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர்.

(iii) விலாசம்.

(iv) விண்ணப்பம் தபாலில் சேர்த்த திகதி, பதிவுத் தபால் இலக்கமும் தபால் நிலையத்தின் பெயரும்.

(ஈ) விண்ணப்பதாரர் ஒருவரைப் பரீட்சைக்கு அனுமதித்தல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகுதியை அங்கீகரித்ததாக அமையாது. எவ்வாறுயினும் பரீட்சை ஆணையாளர் தன் விருப்பத்தின்படி ஒரு விண்ணப்பதாரருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தற்காலிகமாக அனுமதி வழங்கலாம். அவ்வாறு வழங்கப்படும் அனுமதி பின்னர் ஸ்திரப்படுத்தப்படும் அல்லது இரத்து செய்யப்படும்.

9. அடையாள அட்டை :—

விண்ணப்பதாரர்கள் பரீட்சையில் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்திப்படும் விதத்தில் தத்தமது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் சாதனங்களில் ஏவையேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) தபால் அதிபரால் வழங்கப்படும் அடையாள அட்டை.

(ஆ) பரீட்சைத் தினத்துக்கு மூன்று வருடங்களுக்கு மேற்படாத காலத்துக்குள் வழங்கப்பட்ட, தற்போது செல்லுபடியாகும் கடவுச் சீட்டு. (பாஸ் போட்)

(இ) பரீட்சைக்கு மூன்று வருடங்களுக்கு மேற்படாத காலத்துக்குள் ஓர் அரசாங்க திணைக்களத்தால், அரசாங்கக் கூட்டுத்தாபனத்தால் அல்லது ஒரு சட்டபூர்வமான நிறுவனத்தின் அதிகாரத்தின் கீழ் வழங்கப்பட்ட தமது புகைப்படம், அடங்கிய அத்தாட்சிப் பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது வேறுமொரு பத்திரம்.

(ஈ) கடவுச் சீட்டு (பாஸ் போட்) அளவிலான மேனுடல் புகைப்படம் ஒன்று. (விண்ணப்பதாரியின் கையொப்பம் பின்புறத்தில் இடப்பட்டு, இக்கையொப்பமும் மறுபக்கத்தில் இருக்கும் புகைப்படமும் விண்ணப்பதாரியினுடையதேயெனத் திணைக்களத்தின் அதிபர் அல்லது அவருக்குப் பதிலாக கையொப்பமிட அதிகாரமுடைய உத்தியோகத்தரினல் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர், பதவி, விலாசம், திகதி ஆதியன அதில் அடங்கியிருத்தல் வேண்டும். புகைப்படப் பிரதி பரீட்சை மேற்பார்வையாளரினல் வைத்துக்கொள்ளப்படும்).

(உ) ஆட்கள் பதிவு செய்யும் திணைக்களத்தினல் வழங்கப்பட்ட அடையாள அட்டை.

கலாநிதி பீ. உடகம,
கல்வி அமைச்சின் செயலாளரும்,
கல்வி மா அதிபரும்.

பாடசாலைப் பரிபாலனக் கிளை (பா.ப/8/539)
மலாய் வீதி, கொழும்பு—2.
1973 ஜனவரி 30 ஆந் திகதி.

**தலைமை ஆசிரியர் பதவி உயர்வுகள் சம்பந்தமாக நடைபெறும் பரீட்சை விடய சங்கிரகம்**

**1 ஆம் வினப்பத்திரம்—கல்வியின் அடிப்படைக் கொள்கைகளும் முறைகளும்**

1. கல்வியின் அடிப்படைக் கொள்கைகளும் முறைகளும்.

1.1. கல்வி என்றல் என்ன? கல்வியின் நோக்கங்கள். முறையான கல்வியும் முறையற்ற கல்வியும். (இத்தலைப்புகளின் கீழ் பொது அறிவே எதிர்பார்க்கப்படுகிறது.)

2. பின்வரும் சிந்தனையாளர்களின் கல்வித் தத்துவம் சம்பந்தமான அடிப்படைக் கருத்து.

2.1. ஜீன் ஜேகஸ் ரூசோ. (1712—1778)

2.2. பெட்ரிக் பிரீபல். (1782—1852)

2.3. மேரி மொண்டிசூரி அம்மையார்.

2.4. ஜோன் டிவி.

2.5. மகாத்மா காந்தி.

3. கல்வியும் பொருளாதார அபிவிருத்தியும்.

3.1. நாட்டின் பொருளாதார விருத்திக்காகக் கல்வியால் ஆற்றக்கூடிய சேவைகள். (உ—ம்: ஐந்து வருடத்திட்டமும் கல்வியும்.)

3.2. பொருளாதார விருத்திக்குத் துணையாகும் விதத்தில் கல்வித் திட்டத்தினைப் புனரமைப்புச் செய்தல்.

3.3. கல்வி வேலைத் திட்டங்களை நாட்டின் பொருளாதாரத் தேவைகளுக்குப் பொருந்தக் கூடிய வகையில் அமைத்தல்.

3.4. தொழில் அடிப்படையோடு கூடிய பாடத்திட்டம். (உ—ம்: தொழில் முன்னிலை பாடங்கள்.)

3.5. தொழில் இல்லாப் பிரச்சினையை நீக்குவதற்காக அல்லது குறைப்பதற்காகச் செய்ய வேண்டிய கல்வி மாற்றங்கள்.

4. கல்வியும் சமூகமும்.

4.1. கல்வி முன்னேற்றத்துக்குச் சமூகத்தால் செய்யப்படும் சேவைகள்.

4.2. சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்காகக் கல்வித் திட்டத்தினை இயைபுபடுத்திக் கொள்ளும் முறை.

4.3. சமூகப் பெயர்வு (Social Mobility) சம்பந்தமாகக் கல்விக்கு இருக்கும் செயற்பாடுகள்.

4.4. கல்வி நிலையங்களுக்கும் சமூகத்தில் உள்ள மற்றும் ஸ்தாபனங்களுக்கும் இடையில் உள்ள தொடர்பு.

இவ்வினாப் பத்திரத்திற்காக ஆயத்தஞ் செய்யும் விண்ணப்பதாரிகளுக்குக் கீழ்க்காணப்படும் புத்தகங்களும் வெளியீடுகளும் பிரயோசனமாகவிருக்கும்.

1. கல்வியியல்—திரு. டபிள்யு. ஆர். பீ. சோமரத்தின.

2. கற்பித்தலின் அடிப்படை விதிகளும் நவீன முறைகளும்—திரு. டப்ளியு. ஆர். பீ. சோமரத்தின.

3. படிமுறைப் பாடத்திட்டம்.—திரு. எல். ஜீ. ஹேவகே.

4. உஷ்ணவலய சமூகத்தின் கல்வி.—" யுனெஸ்கோ "

**5. பாடத்திட்ட வகைகளும் பாடத்திட்டம் அமைக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்களும்.**

உ—ம் :—(i) ஒழுங்கும் சுதந்திரமும்.

(ii) ஆசிரியர்களுக்குரிய பல தரப்பட்ட கிருத்தியங்கள்.

**6. பாடசாலைக் கருமங்களைத் திட்டமிடும் போது விசேடமாய்க் கவனிக்க வேண்டிய விடயங்கள்.**

6.1. பாடவிதானங்கள், நேரசூசிகை.

6.2. பாடக் குறிப்புக்கள்.

6.3. பாடசாலைப் பரீட்சைகள்.

6.4. வரலாற்றுக் குறிப்புக்கள்—மாணவர்களின் சுய விவரக் கோவைகள்.

6.5. பெற்றார்—ஆசிரியர் தொடர்பு.

6.6. ஆசிரியர்—மாணவர் தொடர்பு.

6.7. வெளி வேலை அமைப்பு—விளையாட்டு, சங்கங்கள், விழாக்கள்.

**7. கற்பித்தலினதும் கற்றலினதும் ஆதாரங்கள்.**

7.1. விளையாட்டு மூலமும் செய்கை மூலமும் கற்பித்தல்.

7.2. டோல்டன் முறையும் தொழில் முறையும்.

7.3. கலந்துரையாடல் முறை, கேள்வி முறை, ஆய்வுகூட முறை, வினைட்கா முறை.

7.4. படிமுறைப் பாடமுறை.

7.5. கேள்வி கேட்டல் சம்பந்தமான வழி முறைகள்.

7.6. பாடமொன்றைத் திட்டமிடல்.

8.

8.1. இலங்கையின் எதிர்காலக் கல்வித் திட்டம்.

8.2. கல்வி அமைச்சு, கல்வித் திணைக்களங்கள், கல்வி வட்டாரங்கள், பாடசாலைகள் ஆதியன தொடர்பு கொண்ட பரிபாலனம் சம்பந்தமான வேலைத் திட்டங்கள்.

எனது இலக்கம் : பா. ப. 8/539.

**தலைமை ஆசிரியர் பதவியுயர்வு சம்பந்தமாக நடைபெறும் பரீட்சை விடய சங்கிரகம்**

**இரண்டாம் வினாப்பத்திரம்**

1. கல்விச் சட்டம், பரிபாலனமும் பாடசாலையில் சம்பளமும்—பணப் பரிமாற்றமும் பாடசாலைப் பொருட்களை வைத்திருத்தலும்—

**1.1 கல்விச் சட்டம்**

1939 ஆம் ஆண்டு முதல் இதுவரை திருத்தப்பட்ட கல்வி ஆணைச் சட்டங்கள் பற்றிய பொது அறிவு இங்கே எதிர்பார்க்கப்படுவதுடன், இதற்காக 1947, 1951, 1953, 1958 ஆகிய வருடங்களில் செய்யப்பட்ட திருத்தங்களும் இத்தோடு சம்பந்தமுடையனவாக இருக்கும். 1960 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கங் கொண்ட உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளும் ஆசிரிய கலாசாலைகளும் (விசேட கட்டளைச் சட்டம்) அத்துடன் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்பது சம்பந்தமான 1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டம் ஆகியன இதற்காகப் பொருத்தமுடையனவாகும்.

1.2 பரிபாலனம் (சாதாரணம்)

(அ) ஆசிரியர் சேவையில் அமர்த்துவது சம்பந்தமான செயல் திட்டங்களும் சேவை நிபந்தனைகளும் பற்றிய அறிவு—இது சம்பந்தமாக இலங்கை அரசாங்க நிறுவனக் கைநூலின் II முதல் VI வரையிலான பந்திகள் பொருத்தமுடையன.

(ஆ) ஆசிரியர் சம்பளமும் சகாயப்படிகளும் பற்றிய விபரங்கள் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குதல் தொடர்பான பொது அறிவு இங்கு எதிர்பார்க்கப்படுகிறது. சம்பளக் கமிசன் சபை அறிக்கை, அதாவது, 1957 ஆம் ஆண்டின் போலியர் கமிசன் அறிக்கையும் 1967 ஆம் ஆண்டின் சம்பள முறண்பாட்டுக் கமிசன் சபை அறிக்கையும் இது சம்பந்தமாக இயைபுடையனவாகும்.

1.3 சேவை தொடர்பான வேறு நியதிகளும் நிபந்தனைகளும்

(அ) ஆசிரியர்களின் லீவு (கடமை லீவு, படிப்பு லீவு உட்பட) சம்பந்தமான செயல் முறைகள், இலங்கை அரசாங்க நிறுவனக் கைநூலின் XII ஆம் பந்தியும், கல்வித் திணைக்களங்களாலும் கல்வி அமைச்சினாலும் காலத்துக்குக் காலம் வெளியிடப்படுகின்ற சுற்றுநிருபங்களும் இது சம்பந்தமாகத் தொடர்புடையனவாகும்.

(ஆ) புகையிரத சலுகைப் பருவச் சீட்டு, கடமை அல்லது லீவு கால புகையிரதப் பயணச் சீட்டுகள் விநியோகித்தலும் உபயோகத்துக்கான தஸ்தாவேஜுகளையும் அறிக்கைகளையும் வைத்திருத்தல் சம்பந்தமான பொது அறிவு. இலங்கை அரசாங்க நிறுவனக் கைநூலின் XIII வது XXVII வது பந்திகளும் கல்வித் திணைக்களங்களாலும் கல்வி அமைச்சினாலும் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளும் இது சம்பந்தமாக தொடர்புடையனவாகும்.

(இ) ஆசிரியர் விடுதிகள்—கல்வி அமைச்சின் 133 ஆம் இலக்க (இல. எஸ். 1/17 ஆம் 70.2.27 ஆந் திகதியும் கொண்ட) சுற்றுநிருபம் இது சம்பந்தமாகத் தொடர்புடையதாகும்.

(ஈ) கடனும் முற்பணமும் (லோக்கோர்சிமாட்டி சகாய நிதி உட்பட) சுகாதார வசதிகளை உள்ளடக்கிய மற்றும் வசதிகளும் சலுகைகளும் இலங்கை அரசாங்க நிறுவனக் கைநூலின் XXV, XXVI, XXVIII, ஆம் பந்திகள் இத்தோடு தொடர்புடையனவாகும்.

(உ) வேறு உரிமைகளும் அவற்றினை அனுபவிக்கும் எல்லையும்—இலங்கை அரசாங்க நிறுவனக் கைநூலின் XXXV முதல் XXXVII வரையுள்ள பந்திகள் இத்தோடு இயைபுடையன.

(ஊ) சாதாரண நடத்தையும் ஒழுக்கமும்—நிறுவனக் கைநூலின் XXXII வது முதல் XXXIV வது வரையுள்ள பந்திகள் இதனோடு தொடர்புடையனவாகும்.

1.4 பரிபாலனம் (பாடசாலையினுள்)

(அ) பாடசாலையின் உட் பரிபாலனம், உதவி ஆசிரியர்களின் கருமங்களை மேற்பார்வை செய்தல், பாடசாலைக் கட்டடங்களும் தோட்டமும் புத்தகங்களையும் தாஸ்தாவேஜுகளை வைத்திருத்தல், வரவு இடாப்புக்கள், சம்பளத் திரட்டுப் புத்தகம், பகற் போசனப் பதிவேடுகள், சாமான் சம்பந்தமான பதிவேட்டுப் புத்தகங்கள், நூல் நிலையப் புத்தகங்கள், இலவச பாடசாலைப் புத்தக விநியோகம் அழியும் பொருட்கள் பதிவேடு ஆதியன பற்றி அறிவு. கல்வித் திணைக்களங்களினாலும் கல்வி அமைச்சினாலும் காலத்துக்குக் காலம் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் இது தொடர்புடையனவாகும்.

(ஆ) கடிதங்களைக் கோவை செய்யும் முறை பற்றிய சாதாரண அறிவு—திறைசேரியின் திட்டமிடற் பகுதியினரால் விநியோகிக்கப்பட்டுள்ள அரசாங்க திணைக்களங்களின் காரியாலய நடைமுறை என்ற புத்தகம் இதனோடு தொடர்புடையதாகும். பாடசாலையொன்றுக்கு கிடைக்கும் கடிதங்களை ஒழுங்காகக் கோவைப்படுத்தும் முறை.

**1.5 பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் சம்பளம், பணப் பரிமாற்றம், பொருட்களை வைத்திருத்தல்.**

(அ) பாடசாலையிலுள்ள ஆசிரியர் சம்பளம். சம்பளம் கொண்டு வருதலும் பகிர்ந்தளித்தலும். சம்பளப் பட்டியல் தயாரித்தலும், பாடசாலையில் சம்பளப் பதிவேடு ஒன்று வைத்திருத்தலும்.

(ஆ) அழியும் பொருட்களின் பட்டியல், பொருட் பதிவேட்டுப் புத்தகம் உட்பட பாடசாலையில் வேறு தஸ்தாவேஜுகளை வைத்திருத்தல்.

(இ) பொருட்கள் சம்பந்தமான வருடாந்தக் கணக்கெடுப்பு, புத்தகம் உட்பட பாடசாலையில் வேறு தஸ்தாவேஜும் அவை சம்பந்தமாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளும்.

(ஈ) பணம் அறவிடல் சம்பந்தமாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளும் அது சம்பந்தமான ஏடுகளை வைத்திருத்தலும். கல்வித் திணைக்களங்களினாலும், அமைச்சினாலும் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள் இவை சம்பந்தமாக பொருத்தமுடையனவாகும்.

2. பொது அறிவு (மூன்றும் வினாப் பத்திரம்)

உள்நாட்டு, வெளிநாட்டு தற்கால நிலை பற்றிய பொது அறிவு.

2-326—09.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46

### அரசாங்க விநியோகத் திணைக்களம்

### உதவி அரசாங்க விநியோகப் பணிப்பாளர் பதவி

அரசாங்க விநியோகத் திணைக்களத்திலுள்ள இரண்டு உதவிப் பணிப்பாளர்கள் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவிகளுள் ஒன்று அரச சேவையில் ஏற்கனவே உள்ள உத்தியோகத்தர்களால் நிரப்பப்படும்.

இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டிருக்கும் படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் செயலாளர், வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சு, த. பெ. இல. 560, கொழும்பு 2 என்ற முகவரிக்கு பின்வரும் திகதிகளன்றோ அல்லது அதற்கு முன்னரோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும்:—

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் 2 ஆந் திகதி, மார்ச்சு 1973.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 2 ஆந் திகதி, மார்ச்சு 1973.

குறிப்பு :—

(i) இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்;

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் எதுவும் கவனிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான கடைசித் திகதி வரை பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாளராவார்கள் ;

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, உள்நாட்டு வெளிநாட்டு வியாபார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச்செலவும் :

ஸ்ரீ லங்கா குடியரசின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல் நலம் உடையவர்களாக இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்யும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன விதிகளும், சேவை நிபந்தனைகளும்.—

(i) இப்பதவி நிரந்தரமானதும் சகாய நிதி அடிப்படையிலானதுமாகும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் தமது சம்பளத்தில் 6 வீதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்க நன்கொடை, திரட்டிய சம்பளத்தில் 9 வீதமாகும். நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமான பதவிகளை வகிக்கும் அபேட்சகர்களும் ஏற்கனவே அரச சேவையிலுள்ளவர்களும் ஓய்வூதிய உரிமைகளைத் தொடர்ந்து பெறுவர்.

(ii) (அ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் மூன்று வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவார்கள். அரசாங்க சேவையில் நிரந்தரமான நியமனத்தை வகிக்கும் உத்தியோகத்தரொருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் குறிக்கப்பட்ட காலத்திற்குப் பதிற் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்படுவார்.
(ஆ) அரச சேவையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் முதலில் ஒரு வருட காலத்திற்கு பதிற் கடமையாற்றும் தரத்தில் வைக்கப்படுவதுடன் உத்தியோகத்தர் தகுதியானவரெனக் கருதப்பட்டால் அதன் பின் உறுதிப்படுத்தப்படுவார். பதிற் கடமையாற்றும் காலத்தின்போது அவர் தகுதியற்றவரெனக் கருதப்பட்டால் அவரது நிலையான பதவிக்கு அவர் திருப்பி மாற்றப்படுவார்.

(iii) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் அரசாங்க விநியோகப் பணிப்பாளர் தீர்மானிக்கும் அரசாங்க பண்டசாலைத் திணைக்களங்களில் பயிற்சி நெறியொன்றினை மேற்கொள்வதற்கு வேண்டப்படுவதுடன் சகல விண்ணப்பங்களுக்கு முட்பட்ட பண்டசாலைகள் பற்றியும் இக்காலத்துக்கேற்ற பண்டசாலை முறைகளையும், கணக்கு முறைகளையும் பற்றின சிறந்த அறிவையும், பெறுவதற்கு வேண்டப்படுவார். உறுதிப்படுத்தப்படுவதற்குத் தகுதி பெறுவதற்கு முன்னர் அவர்கள் ஸ்ரீ லங்கா அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்களிலும், திணைக்களப் பண்டசாலைப் பிரமாணங்களிலும் பண்டசாலை முகாமையிலுமான திணைக்களப் பரீட்சையில் சித்தியடைவதற்கு வேண்டப்படுவார்கள். தகுதிகாண் நிலையிலுள்ள அரசாங்க விநியோக உதவிப் பணிப்பாளரொருவர் தனது 3 வருட தகுதிகாண் காலத்திற்குள் சித்தியடையத் தவறுமிடத்து இப் பரீட்சையை மேலுமொரு தடவை அல்லது மேலும் பல தடவைகள் எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவார். இரண்டாந் தடவை சித்தியடையத் தவறுதல் சேவையில் முடிவினை ஏற்படுத்தும்.

3. சம்பளமும் படிகளும்.—

இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் வருடாந்தம் ரூபா 360 ஐக் கொண்ட 12 சம்பள ஏற்றங்களுடன் வருடாந்தம் ரூபா 6,720 யிலிருந்து ரூபா 480 ஐக் கொண்ட 7 வருடாந்த சம்பள ஏற்றங்களுடன் வருடாந்தம் ரூபா 14,400 வரை உயரும். ரூபா 7,800, ரூபா 11,520 பெறுமுன் வினைத்திறமை காண் தடைகளுண்டு.

4. தேவைப்படும் தகைமைகள்.—

(i) அரச உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட பதவி—விண்ணப்பதாரர்கள் மேற்கூறப்பட்ட பொது எழுதுவினைஞர் சேவையின் 1 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களாயிருப்பதுடன் பண்டசாலை வேலையில் குறைந்தது 5 வருட அனுபவத்தைப் பெற்றிருப்பதுடன், போற்றத்தக்க சேவை செய்தவராயும் இவ்வேலைக்கான உளச் சார்பினை பெற்றவராயுமிருத்தல் வேண்டும்.

(ii) பகிரங்கத்தில் போட்டியிடுபவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பதவி—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்வருவனவற்றிற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) சிறந்த நல்லொழுக்கமுடையவராகவும், உடல் நலமுடையவராகவுமிருத்தல் வேண்டும்;

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் பட்டதாரியாயிருத்தல் வேண்டும். உயர் கீர்த்தி பெற்றவர்களுக்குச் சலுகை கொடுக்கப்படும் ;

(இ) 1973.03.02 ஆந் திகதியின் போது 21 வயதிற்குக் குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவுமிருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதெல்லைகள் அமையாது)

5. விண்ணப்பதாரர் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கப்படும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (குறிப்பு : சமயத் தீட்சைச் சான்றிதழ், அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலையின் பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) நற்சான்றிதழ்கள் இரண்டு. இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர்தொழிற் தகைமையும் தொழில் நுட்பத் தகைமையும் அல்லது உயர்தொழிற் தகைமை அல்லது தொழில்நுட்பத் தகைமை.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்கள்.

குறிப்பு :—(i) சாதனங்களையாயினும் சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரரின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களை திணைக்களம்/கூட்டுத்தாபன தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அது சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், உள்நாட்டு வெளிநாட்டு வியாபார அமைச்சு என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்புதலாகாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இவ்வர்த்தமானியின் I ஆம் பாகம் (II அ) தொகுதியில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்வையிடுக.

9. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும். அவ்வறிவித்தல் கடைசித் திகதியிலிருந்து 3 வார காலத்திற்குள் கிடைக்கப் பெறுவிட்டால், அதைப்பற்றி உடனே எனது கவனத்திற்குக் கொண்டு வருதல் வேண்டும்.

ஜே. பீ. கெலேகம,
செயலாளர்,
வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார அமைச்சு.

(இ) தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு பயிற்சி நெறிக்குமான தகவுத்திறன் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யுமிடத்து பரீட்சார்த்திகள் ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சி நெறிகளுக்கு அனுமதி கோரலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சி நெறிக்கு அனுமதிக்கப்படுதற்குத் தகைமை பெறுமிடத்து குறித்த ஒரு பயிற்சி நெறியைப் பின்பற்றுமாறு விண்ணப்பதாரி ஒருவரை வேண்டும் உரிமையைத் தனதாகக் கொண்டுள்ள மகா வித்தியாதிபதியின் அங்கீகாரத்துக்கமைய பரீட்சார்த்தி தனது தெரிவைச் செய்யலாம்.

(ஈ) பகுதிநேரப் பயிற்சி நெறி ஒன்றுக்கு அத்தகைய துறையில் வேலை புரிபவர்களே விண்ணப்பிக்கலாம். பகுதி நேரப் பயிற்சி நெறிகளைப் பின்பற்றுபவர்களிடமிருந்து கட்டணங்கள் பின்வருமாறு அறவிடப்படும் :—

| | | | ரூபா |
|---|---|---|---|
| (1) உயர்தொழில் பயிற்சி நெறி | .. | .. | 15/– மாதாந்தம் |
| (2) நுண்தொழிலாளர் பயிற்சி நெறி | .. | .. | 10/– மாதாந்தம் |
| (3) பணிகளிலான பயிற்சி நெறி | .. | .. | 5/– மாதாந்தம் |

(உ) யாதேனும் ஒரு நிலையத்தில் ஆரம்ப எந்திரவியல் விஞ்ஞான பரீட்சையில் சித்தியடைந்துள்ள மாணவர்கள் வேறு ஒரு நிலையத்தில் நடைபெறும் மாலைநேர எந்திரவியல பயிற்சி நெறிக்கு அனுமதி கோருமிடத்து, விண்ணப்பிக்கப்படும் பயிற்சி நெறிக்குப் பொருத்தமுடைய புகுமுகப்பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

2. **பரீட்சை நிலையங்கள்.**—(i) பரீட்சை பின்வரும் நிலையங்களில் நடாத்தப்படும் :— கொழும்பு, மட்டக்களப்பு, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, காலி, யாழ்ப்பாணம், குருநாகல், பதுளை, அனுராதபுரம், களுத்துறை, கம்பகா, மாத்தறை, நீர்கொழும்பு, நுவரேலியா.

(ii) பரீட்சார்த்திகள் ஒரு பரீட்சை நிலையத்தை மட்டுமே தெரிவு செய்யலாம்.

(iii) பரீட்சார்த்தி ஒருவர் தெரிவு செய்யும் பரீட்சை நிலையத்தில் மாற்றம் எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது.

3. **புகுமுகப் பரீட்சைக்குத் தோற்றுதற்கான தகவுத்திறன்.**—பரீட்சார்த்தி ஒருவர்—

(i) நற்குணமுடையவராயும்.

(ii) இலங்கைப் பிரசையாகவும்.

(iii) குறித்த பயிற்சி நெறிக்கு அமையும் கல்வித் தகைமைகளைப் பெற்றிருக்கவும் வேண்டும். ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் அமையும் கல்வித்தகைமைகள் இப்பிரமாணங்களின் முடிவில் காணப்படும் அட்டவணையில் கொடுபட்டுள்ளன.

**குறிப்பு.**—(i) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடைபெறும் பயிற்சி நெறிகளுக்கான அனுமதித் தகவுத்திறன், நிபந்தனைகள் பயிற்சி நெறிப் போதனா மொழிக்கு அமைய வேறுபடக்கூடும்.

(ii) பரீட்சார்த்தி ஒருவர் சி. பா. த. (ஆங்கில) பத்திரப் பரீட்சையில் அல்லது க. பொ. த. (சா.த.) பத்திரப் பரீட்சையில் " அ " அல்லது " ஆ " பாடத்திட்டத்தில் ஆங்கில மொழியில சித்தியெய்தியிருப்பின் அவர் ஆங்கில மொழியில் சித்தியெய்தியுள்ளவராகக் கணிக்கப்படும்.

(iii) பரீட்சார்த்தி ஒருவர் க. பொ. த. (சா.த.) பத்திரப் பரீட்சையில் ஆரம்ப கணிதத்தில் அல்லது தூய கணிதத்தில் அல்லது உயர்தர கணிதத்தில் சித்தியடைந்திருப்பின் கணிதத்தில் வேண்டிய சித்தியை அவர் பெற்றிருப்பதாகக் கணிக்கப்படும்.

(iv) க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் பரீட்சார்த்தி ஒருவர் ஒரு பாடத்தில சித்தியெய்தியிருப்பின் க. பொ. த. (சா.த.) பத்திரப் பரீட்சையில குறித்த பாடத்தில் தேவைப்படும் சித்தி பெறுவதிலிருந்து அவர் விலக்களிக்கப்படுவார்.

4. **வயதெல்லை.**—ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் உரிய புகுமுகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகவுத்திறனில் இது கொடுபட்டுள்ளது.

5. **எழுத்துமூலப் பரீட்சைத் திகதி.**—இப்பரீட்சை 1973 ம் ஆண்டு மே மாதம் 25 ம் திகதி ஆரம்பமாகும்.

6. **நேர்முகப் பரீட்சை.**—எழுத்துமூலப் பரீட்சையில் போதிய தரத்தை அடைந்துள்ள பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்குத் தோற்றுமாறு வேண்டப்படுவார். இந்நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி, நேரம் ஆகியவை சம்பந்தப்பட்ட நிலையத் தலைவர்களால் அறிவிக்கப்படும்.

7. **மொழி மூலம்.**—எழுத்துமூலப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கிடைக்கும். எனினும, பொது எந்திரவியல் அறிவிலும் தொழில்களுக்கான எண்கணிதத்திலும் வினாத்தாள்கள் சிங்கள, தமிழ் மொழிகளில் மாத்திரமே கிடைக்கும்.

8. **பரீட்சார்த்தி சேர விரும்பும் தொழில்நுட்ப நிலையம்.**—பரீட்சார்த்தி யாதேனும் ஒரு தொழில்நுட்ப நிலையத்துக்கான அனுமதிக்குப் போட்டியிடலாம்.

9. **நேர அட்டவணை**—

**முதல் நாள்**

மு. ப. 9.00—மு. ப. 11.00 கேத்திர கணிதமுறை வரைதலும் பொறிமுறை வரைதலும்.

மு. ப. 11.15—மு. ப. 11.45 பொது விவேகம்.

பி. ப. 1.00—பி. ப. 3.00 தூயகணிதம்.

பி. ப. 3.15—பி. ப. 4.15 கட்டுரை (சிங்களம்/தமிழ்.)

**இரண்டாம் நாள்**

மு. ப. 8.30—மு. ப. 9.30 கட்டுரை (ஆங்கிலம்).
மு. ப. 9.45—மு. ப. 11.45 எண்கணிதம்.
பி. ப. 12.30—பி. ப. 2.30 பௌதிகவியல்.
பி. ப. 2.45—பி. ப. 4.45 வாணிக எண்கணிதம்.

**மூன்றாம் நாள்**

மு. ப. 8.30—மு. ப. 10.30 ஆரம்ப கணிதம்.
மு. ப. 10.45—பி. ப. 12.45 பிரயோக கணிதம்.
பி. ப. 1.45—பி. ப. 3.45 தொழில்களுக்கான எண்கணிதம்.
பி. ப. 4.00—பி. ப. 4.45 பொது எந்திரவியல் அறிவு.

10. **புகுமுகப் பரீட்சைக்கான பாடத்திட்டங்கள்.**—(அ) தூயகணிதம், பிரயோக கணிதம், எண்கணிதம், வாணிக எண்கணிதம், பௌதிகவியல், கேத்திர கணித பொறிமுறை வடிவ வரைதல ஆகியவற்றில் க. பொ. த. (சா.தர.) பத்திரப் பரீட்சைக்குள்ளவாறு.

(ஆ) ஆரம்ப கணிதம்—அட்சர கணிதம், கேத்திர கணிதம், திரிகோணகணிதம் ஆகியவற்றில் க. பொ. த. (சா.தர) பத்திரப் பரீட்சைக்குள்ளவாறு எனினும் வினக்கள் ஆரம்ப முறையானவையாகவே இருக்கும். சிக்கலான கணக்குகளின் பிரயோகத்திற்கும் அவற்றின் கோட்பாட்டு முறைக்குமன்றி யாந்திரீக வேலைக்கும் நிதானித்து அறியக்கூடிய வேலைக்கும் கூடிய முக்கியத்துவம் அளிக்கப்படும். எண்கணிதத்தில் வினக்கள் ஒன்றும் கொடுபடமாட்டா.

(இ) தொழில்களுக்கான எண்கணிதம்—நான்கு விதிகள், ஆங்கில முறை, மீற்றர் முறை அளவைகள், நீள்சதுரங்கள், சதுரங்கள், நேர்கோட்டு வடிவங்கள், வட்டங்கள் ஆகியவற்றின் பரப்பும் பெட்டிகளினதும் உருளைகளினதும் கோணங்களினதும் கன அளவுகள்.

(ஈ) கட்டுரை—கொடுபடும் பல விடயங்களுள் ஒன்றைப் பரீட்சார்த்திகள் தெரிவு செய்யவேண்டும். இவ்விடயங்கள் வியாபார முயற்சிகள், வர்த்தகம், கைத்தொழில், விஞ்ஞானம், உலக சம்பவங்களும் பிரச்சனைகளும், ஸ்தல சம்பவங்களும் பிரச்சனைகளும் ஆதியனபோன்ற விவகாரங்களுடன் சம்பந்தப்பட்டவையாக அமையும். சரியான, தெளிவான சொற்களின் உபயோகத்திற்கும் எண்ணங்களை தர்க்க முறையில் ஒழுங்குபடுத்துவதற்கும் விசேட அம்சம் கொடுபடும்.

(உ) பொது எந்திரவியல் அறிவு—வேலைக்கள பொதுக் கருவிகள், யந்திரங்கள் ஆகியவை பற்றி பரீட்சார்த்தியின் அறிவைப் பரீட்சிக்கும் முறையில் வினக்கள் கொடுபடும்.

11. **கட்டணங்கள்.**—(i) 1 முதல் 19 வரையிலான பயிற்சிநெறிகளுக்குரிய பரீட்சைக் கட்டணம் ரூ. 15/– உம் 20 முதல் 39 வரையிலானவற்றிற்கு ரூ. 10/– உம் ஆகும்; அத்துடன் மேலதிகமான ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் கட்டணம் ரூ. 5/– ஆகும்.

(ii) கட்டணம், படிவத்தில் ஒட்டப்பட்டு பரீட்சார்த்தியின் கையொப்பமும் திகதியும் இடப்பட்டு அழிக்கப்பட்டும் இறைவரி முத்திரைகள் மூலம் செலுத்தப்பட வேண்டும்.

அழிக்கப்படாது அனுப்பப்படும் முத்திரைகளுக்கு இத்திணைக்களம் பொறுப்பு ஏற்காது.

12. **பரீட்சைக்கு அனுமதித்தல்.**—(i) பிரமாணங்களுக்கு அமையவும் உரிய கட்டணத்துடனும் விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்கும் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

(ii) பரீட்சைக்கு அனமதிக்கப்படுதல் தகவுத்திறன் ஏற்றுக்கொள்ளப்படுதலாக அமையாது. பரீட்சைக்கு தகவுத்திறன் அற்றவராக அல்லது வேண்டிய தகவலைக் கொடுக்காதவராக அல்லது பொய்யான தகவலைக் கொடுத்தவராகக் காணப்படும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக் காலத்திலேனும் பரீட்சைக்குப் பின்னரேனும் பயிற்சி நெறிக் காலத்திலேனும் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்த பின்னரேனும் தகுதியற்றவராக்கப்படுவார்.

13. **பிரவேசம்.**—(i) இத்திணைக்களத்தினால் வழங்கப்படும் விணணப்பப் படிவங்களில் மட்டுமே விண்ணப்பம் செய்யப்படுதல் வேண்டும். இப்படிவங்கள், இடதுபக்க மேல் மூலையில் " எஸ்ஜீ " என இடப்பட்டு, சொந்த விலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்படாத நீண்ட காகித உறை அனுப்பும் ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் மார்ச்சு 1 ம் திகதியிலிருந்து 7 ம் தேதி வரை அனுப்பப்படும். இப்படிவங்களை நேரடியாகப் பெறவிரும்புவோர் மார்ச்சு 8 ம் திகதி தொடக்கம் 14 ம் திகதி வரை வெவ்வேறு தொழில்நுட்ப நிலையங்களிலிருந்தும் 1973 மார்ச்சு 8 ம் திகதியிலிருந்து 15 ம் திகதிவரை இத்திணைக்களத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

(ii) பிரவேசப் படிவம் பூரணமாகவும் செம்மையாகவும் பரீட்சார்த்தியால் நிரப்பப்பட வேண்டும். யாதேனும் ஒரு விபரம் பூரணமற்றதாக விருப்பின் அங்கு கொடுத்துள்ள விபரங்களுக்கமைய அப்படிவம் பரீட்சைக்கு முன்னர் நிராகரிக்கப்பட வேனும் பரீட்சையின் பின்னர் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்தி தகுதியற்றவராக்கப்படவேனும் கூடும். பின்வரும் விடயங்களுக்கு பரீட்சார்த்திகளின் கவனம் கோரப்படுகின்றது :

(அ) வேலையில அமர்ந்துள்ள பரீட்சார்த்திகள் தங்கள் பிரவேசப்பத்திரங்களை அவர்களை வேலைக்கமர்த்தியுள்ளவர்கள் மூலமேனும் தமது ஸ்தல பகுதித் தலைவர்கள் மூலமேனும் அனுப்ப வேண்டும்.

(ஆ) பரீட்சார்த்தியின் கையொப்பம், அங்ஙனம் செய்தற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும். வேலையில் அமர்ந்துள்ளவர்களின் விண்ணப்பங்களில் கொடுபடும் கையொப்பங்கள் அவர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளவர்களால் அல்லது ஸ்தல பகுதித்தலைவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

(iii) பூரணப்படுத்தப்பட்ட பிரவேசப் பத்திரங்கள் 1973 ஆம் ஆண்டு மார்ச்சு 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பரீட்சை ஆணையாளருக்கு (கொழும்பு 2) பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

(iv) பிரவேசப் பத்திரங்கள் கிடைத்தமைபற்றி பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்படமாட்டாது.

(v) சாதனங்கள் ஒன்றும் விண்ணப்பப் பத்திரத்துடன் இணைக்கப்படலாகாது.

14. **பிரவேசக் கோரிக்கையை நிராகரித்தல்.**—(i) (அ) பூரணமற்ற அல்லது குறைபாடான அல்லது பிரமாணங்களுக்கு அமையத் தயாரிக்கப்படாத (ஆ) உரிய கட்டணத்தைக் கொண்டிராத (இ) பிரவேசப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படுதற்கான கடைசித் திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் பிரவேசப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்; சம்பந்தப்பட்ட அபேட்சகர்கள் அது பற்றி அறிவிக்கப்படுவார்கள். அபேட்சகர் ஒருவர் பரீட்சைக்கு எற்கனவே தோற்றியிருப்பின் அவர் தகுதியற்றவராக்கப்படுவார்.

(ii) ஒரு பிரவேசப் பத்திரம் நிராகரிக்கப்படின் அல்லது அபேட்சகர் ஒருவர் தகுதியற்றவராக்கப்படின் அவர் தனது கட்டணத்தை இழப்பார்.

15. **பரீட்சையிலிருந்து விலகுதல் அல்லது பரீட்சைக்குச் சமூகமளியாதிருத்தலும் கட்டணத்தைத் திருப்பிக் கொடுத்தலும்.**— (i) பரீட்சையிலிருந்து விலகுவதான அறிவித்தல் பிரவேசப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்படின், செலுத்தப்பட்ட கட்டணத்தின் 90% திருப்பிக் கொடுபடும்.

(ii) பரீட்சைக்குச் சமூகமளியாதிருத்தல் (எக்காரணத்தையிட்டும்) உட்பட சகல ஏனைய சந்தர்ப்பங்களிலும் கட்டணமேனும் கட்டணத்தின் எப்பகுதியேனும் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

(iii) எனினும், மரணம் அல்லது கடும் அல்லது நீண்ட கால சுகவீனம் காரணமாக (க்ஷயரோகம், பாரிசவாதம், உளக்கோளாறு, நரம்புத்தளர்ச்சி) ஒருவர் ஒரு வினப்பத்திரத்துக்கேனும் தோற்றாதிருப்பின், அவருக்கு கட்டணத்தில 90% திருப்பிக் கொடுக்கப்படும். அத்தகைய பணத்தை மீளப் பெறுவதற்கான விண்ணப்பம் பரீட்சைக் கடைசித் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும்.

16. **அனுமதிச் சீட்டுகள்.**—(i) பரீட்சை ஆரம்பமாவதற்கு ஒரு வாரத்திற்குமுன் இவற்றை வழங்குதல் சம்பந்தமாக புதினத்தாள்கள் மூலமும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மூலமும் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலைக் கவனித்து கீழே கொடுபட்டுள்ள அறிவுறுத்துரைகளுக் கமைய பரீட்சார்த்திகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ii) அனுமதிச் சீட்டுகளைப் பரீட்சார்த்திகள் பெறுவிடின் அவர்கள் (தந்திமூலம் விரும்பற்பாலது) கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள இத்திணைக்களத்துடன் (தந்தி விலாசம்—" பரீட்சை ", கொழும்பு) பின்வரும் விபரங்களைக் கொடுத்து தொடர்பு கொள்ள வேண்டும். நேர்முகமாக வரும் பரீட்சார்த்திகள் இத்திணைக்களத்தின் தரவு நிரற்படுத்தும் கிளையில் விசாரணை செய்யும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

(அ) பரீட்சைப் பெயர் ;

(ஆ) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;

(இ) பரீட்சார்த்தியின் தபால் விலாசம் ;

(ஈ) பரீட்சார்த்தி விண்ணப்பித்த பரீட்சை நிலையம் ;

(உ) பிரவேசப் பத்திரம் அனுப்பப்பட்ட தபாற்கந்தோர், கடிதத்தின் பதிவிலக்கம் அனுப்பிய திகதி.

17. **அடையாளப் பத்திரங்கள்.**—எல்லாப் பரீட்சார்த்திகளும் தாம் எடுக்கும் ஒவ்வொரு பாட வேளையிலும் தாம் உண்மையான பரீட்சார்த்திகள் என்பதை மேற்பார்வையாளருக்கு நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்கு பின்வரும் சாதனங்களுள் எதுவேனும் ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) தலைமை தபால் அதிபரால் வழங்கப்படும் அடையாளச் சீட்டு ;

(ஆ) ஆட்களைப் பதியும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஓர் அடையாள அட்டை ;

(இ) பரீட்சை ஆரம்பமாவதற்கு 3 வருடங்களுக்கு முன்னுள்ள காலத்திற்குள் பெற்ற செல்லுபடியான துறைமுகஞ் செல் அனுமதிப் பத்திரம் ;

(ஈ) பரீட்சை ஆரம்பமாவதற்கு 3 வருடங்களுக்கு முன்னுள்ள காலத்துக்குள் ஓர் அரசாங்கப் பகுதி அதிகாரத்தின் கீழ் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனத்தின் அதிகாரத்தின் கீழ் அல்லது சட்டமுறையான ஒரு நிறுவனத்தின் அதிகாரத்தின் கீழ் வழங்கப்பட்டதும் பரீட்சார்த்தியின் நிழற் படத்தைக் கொண்டதுமான யாதேனும் சான்றுப் பத்திரம் அல்லது உத்தரவுப்பத்திரம் அல்லது தராதரப் பத்திரம் ;

(உ) துறைமுகஞ் செல் அனுமதிப் பத்திர அளவினதான நிழல் படம். இதன் மறுபக்கத்தில் கையொப்பப் பத்திரத்தில் உறுதி கூறத் தகுதிவாய்ந்த ஒருவரால் பின்வருமாறு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

மறுபக்கத்திலுள்ள நிழற் படமும் கீழே காணப்படும் கையொப்பமும்.......................பரீட்சார்த்தியுடையதுதானென அத்தாட்சிப் படுத்துகிறேன.
(பரீட்சார்த்தியின முழுப்பெயர்)

......................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

..............................................
அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர்.

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயரும் அந்தஸ்தும் : ————.

திகதி : ————.

பரீட்சை மண்டபத்திலுள்ள மேற்பார்வையாளரால் இந்நிழற் படம் வைத்துக்கொள்ளப்படும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள யாதேனும் சாதனங்களைச் சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தி ஒருவர் தற்காலிகமாகப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவாரெனினும் பின்னர் அவருடைய தகுதி பரீட்சை ஆணையாளரின் தற்றுணிபுக்கேற்ப நிராகரிக்கப்படவும் கூடும்.

18. **சாதனங்கள்.**—(i) பின்வரும் சாதனங்களில் சிலவேனும் எல்லாமேனும் வேண்டப்படக்கூடும் :—

(அ) பிரபல்யம்வாய்ந்த இருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் நற்சாட்சிப் பத்திரங்கள். இவை சமீப காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகவும் பரீட்சார்த்தியை குறைந்தபட்சம் ஐந்து வருடங்களுக்கு மேலாக நன்குஅறிந்தவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டனவாகவும் இருக்க வேண்டும். பாடசாலைத் தலைவர்களிடமேனும் பரீட்சார்த்தி வதியும் பட்டணத்தில் அல்லது கிராமத்தில் உள்ள உத்தியோகத்தர்களிடமேனுமிருந்து பெற்றுக்கொள்ளப்படுபவை மிகச் சிறந்தனவாகும்.

(ஆ) பிறப்புச்சாட்சிப் பத்திரம் அல்லது வயதை அத்தாட்சிப்படுத்தும் விசேட பத்திரம்.

(இ) இலங்கைப் பிரசையாகப் பதிவு செய்துள்ள அத்தாட்சிப் பத்திரம் அல்லது வம்சாவழியில் பிரசாவுரிமையை ஏற்றுக்கொள்வதான உத்தியோகபூர்வமான மூலக் கடிதம் (பொருத்தமானவிடத்தில்).

(ஈ) சி. பா. த. அல்லது க. பொ. த. பத்திரம் (இவை வழங்கப்படாத விடத்து, தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்ட பெறுபேற்று அட்டவணை அல்லது பாடசாலைப் பரீட்சார்த்தியாயின் பாடசாலைததலைவரால் வழங்கப்படும் பெறுபேறு பற்றிய கூற்று). இக்கூற்று பரீட்சை நடைபெற்ற மாதம், வருடம், சுட்டிலக்கம், பாடங்கள், பாடங்களின் தரங்கள் ஆகிய விபரங்களையும் பரீட்சார்த்தியின் பெயரையும் கொண்டதாக அமைய வேண்டும்.

(உ) க. பா. த. பத்திரம் அல்லது 8 ம் வகுப்புச் சித்தி தேவைப்படுமிடத்து பாடசாலையால் அல்லது வித்தியா பகுதியால் வழங்கப்பட்ட முறையான, உத்தியோக பூர்வமான தராதரப் பத்திரம் அல்லது பாடசாலைத் தலைவரால் வழங்கப்படுவதும் பாடசாலையின் பெயர், பரீட்சார்த்தி பாடசாலையில் படித்த காலம் ஆகிய விபரங்களைக் கொண்டதுமான ஒரு கூற்று.

(ஊ) யாதேனும் ஒரு பயிற்சி நெறிக்கு அனுமதிக்கப்படுதற்கு வேண்டிய கல்வித் தகைமைகளை நிரூபிக்கும் வேறு யாதேனும் அத்தாட்சிப் பத்திரம்.

(எ) வேலைக்கமர்த்தியுள்ளவரிடமிருந்து பெற்றுச்கொள்ளப்படும் அத்தாட்சிப் பத்திரம், வேண்டியவிடத்து.

(ii) மேற்குறிக்கப்பட்டுள்ள சாதனங்களையேனும் அவற்றின் பிரதிகளையேனும் பிரவேசப் பத்திரத்துடன் அனுப்பலாகாது. பரீட்சார்த்தி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் நேரத்தில் நேர்முகப் பரீட்சைச் சபையினருக்கு இவற்றைச் சமர்ப்பித்தற்கு ஆயத்தமாய் வைத்திருக்க வேண்டும். தமது தகவுத்திறனை நேர்முகப் பரீட்சையின்போது, வேண்டியனவும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியனவுமான சாதனங்களைச் சமர்ப்பித்து நிரூபிக்க முடியாதவர்கள் தகுதியற்றவராக்கப்படுவார்கள்.

(iii) அறிவுறுத்துரைகளை அலட்சியம் செய்து சாதனங்களைப் பிரவேசப் பத்திரத்துடன் அனுப்பும் பரீட்சார்த்திகளின் சாதனங்கள் காணமற் போகுமிடத்து அவற்றிற்கான பொறுப்பை இப்பகுதி ஏற்பதற்கில்லை.

(iv) பரீட்சார்த்தி அனுப்பும் சாதனங்களின் உறுதிக்கு அவரே முழுப் பொறுப்புடையவராவர். மாற்றப்பட்ட அல்லது கள்ள ஒப்பமிட்ட அல்லது உண்மையற்ற சாதனங்களைச் சமர்ப்பிக்கும் பரீட்சார்த்திகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்.

(v) இப்பிரமாணங்களில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் பற்றியும் பரீட்சாதிகாரி, மகா வித்தியாதிபதியுடன் கலந்தாலோசித்து தற்றுணிபுக்கேற்ப நடவடிக்கை எடுப்பார்.

பரீட்சைத் திணைக்களம்,
மலாய் வீதி, கொழும்பு 2,
1973 ம் ஆண் ஜனவரி மீ 25 ந வை.

போகொட் பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

| பயிற்சிநெறி எண் | பயிற்சிநெறியின் பெயர் | பயிற்சி நெறித்தன்மை | தகவுத்திறன் தேவைகள் | புகுமுகப் பரீட்சைக்கு எடுக்க வேண்டிய பாடங்கள் | பயிற்சி நெறி நடைபெறும் நிலையங்கள் (போதனமொழி விபரத்துடன்) |
|---|---|---|---|---|---|
| 1. | படம்வரை தொழில் பயில்வோர் தராதரப்பத்திரம்—ஆரம்ப | பகல் முழுநேர—ஒரு வருடம் | இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி க. பொ. த. (சா) பத்திரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி. குறித்த 6 பாடங்களாவன : சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம், வேறு 4 பாடங்கள், அல்லது<br>கணிதத்துடன் சி. பா. த. பத்திரம் (கணிதத்திலான சித்தி வேறொரு தோற்றத்தில் க. பொ. த. (சா) பத்திரப் பரீட்சையில் பெற்றிருக்கப்படலாம்)<br>வயது : 1.1.1974 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) தூய கணிதம் ..<br>(3) பிரயோக கணிதம், பௌதிகவியல், கேத்திர கணித வடிவமுறை, பொறிமுறை வரைதல் ஆகியவற்றுள் யாதேனும் ஒன்று | தெகிவலை, காலி, கண்டி, பல்தொழில் நுட்ப நிறுவனங்கள் (சிங்களம்) யாழ்ப்பாணம் பல்தொழில்நுட்ப நிறுவனம் (தமிழ்) கனிட்ட தொழில்நுட்ப நிலையம், குருணகல் (சிங்களம்) |
| ௨. | நில அளவையாளரும் மட்டம்பார்ப்போரும் தராதரப்பத்திரம் | பகல் முழுநேர—ஒருவருடம் | தூயகணிதத்தில் திறமைச் சித்தியும் (அ) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் (ஆ) பௌதிகவியல் (இ) வேறும் மூன்று பாடங்கள் உட்பட ஆறு பாடங்களில் க. பொ. த. (சா) பத்திரப் பரீட்சையில், இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, சித்தியும்<br>மூ.கு.—இப்பயிற்சி நெறியைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்பவர்கள் தியத்தலாவ அளவையியல், தேசப்படத் தயாரிப்பு நிலையப் பிரவேசப் பரீட்சைக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராவர்<br>க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் தூய கணிதத்திலும், பௌதிகவியலிலும் சித்தி அடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br>வயது : 1.1.1974 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) தூய கணிதம் .. | தெகிவலை, காலி, கண்டி பல்தொழில்நுட்ப நிறுவனங்கள் (சிங்களம்) யாழ்ப்பாண பல்தொழில்நுட்ப நிறுவனம் (தமிழ்) ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையம், அம்பாறை (சிங்களம்/தமிழ்)—ஆண்களுக்கு மாத்திரம் வதிவிட வசதியுடன். கனிட்ட தொழில்நுட்ப நிலையம், பதுளை (சிங்களம்) |
| ௩. | ஷ .. | மாலைநேர—மூன்று வருடங்கள் | மேலேயுள்ள 2 ஆம் இலக்கப் பயிற்சி நெறிக்கு அமைவதுபோல ; அல்லது ..<br>ஆரம்ப எந்திரவியல் விஞ்ஞான பயிற்சிநெறியை சித்திகரமாகப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.<br>வயது : 1.1.1974 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) தூய கணிதம் .. | யாழ்ப்பாண பல்தொழில்நுட்ப நிறுவனம் (தமிழ்) கண்டி, காலி பல்தொழில் நுட்ப நிறுவனங்கள் (சிங்களம்) கனிட்ட தொழில்நுட்ப நிலையம், பதுளை (சிங்களம்) |
| ௪. | எந்திரவியல் தராதரப் பத்திரம் (பொறிமுறை/மாநகர சபை/மின்சாரம் அமைப்பு) | மாலைநேர—மூன்று வருடங்கள் | இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி க. பொ. த. (சா) பத்திரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி. குறித்த 6 பாடங்களாவன : சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம், பௌதிகவியல், வேறு 3 பாடங்கள் ; அல்லது<br>கணிதத்துடனும் பௌதிகவியலுடனும் சி. பா. த. பத்திரப் பரீட்சையில் சித்தி. (கணிதத்திலும் பௌதிகத்திலுமான சித்திகள் வேறொரு தோற்றத்தில் க. பொ. த. (சா) பத்திரப் பரீட்சையில் பெற்றிருக்கப்படலாம்) ; அல்லது<br>ஆரம்ப எந்திரவியல் விஞ்ஞான பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.<br>வயது : 1.1.1974 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) தூய கணிதம் ..<br>(3) பிரயோக கணிதம் ..<br>(4) பௌதிகவியல் .. | பல்தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம் (தமிழ்), பல்தொழில்நுட்ப நிறுவனங்கள் கண்டி, காலி (சிங்களம்), கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள் குருநாகல், இரத்மலானை (சிங்களம்) பதுளை (சிங்களம்) |
| ௫. | கட்டட அமைப்பு தராதரப் பத்திரம் | மாலைநேர—மூன்று வருடங்கள் | மேலேயுள்ள 1 ஆம் இலக்கப் பயிற்சி நெறிக்கு அமைவதுபோல அல்லது ஆரம்ப எந்திரவியல் விஞ்ஞான பயிற்சி நெறியை பூர்த்தி செய்திருக்க வேம்ண்டு.<br>வயது : 1.1.1974 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) தூய கணிதம் .. | பல்தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம் (தமிழ்), பல்தொழில்நுட்ப நிறுவனங்கள் கண்டி, காலி (சிங்களம்), கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள் பதுளை, குருநாகல், இரத்மலானை, அனுராதபுரம் (சிங்களம்) |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. கட்டட அமைப்பு தராதரப்பத்திரம் | பகல் பகுதிநேர—மூன்று வருடங்கள் | மேலேயுள்ள 5 ஆம் இலக்கப் பயிற்சி நெறிக்கு அமைவதுபோல ..<br>வயது : 1.1.1974 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்கவேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) தூய கணிதம் .. | பல்தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம் (தமிழ்), பல்தொழில்நுட்ப நிறுவனங்கள் கண்டி, காலி, தெகிவலை (சிங்களம்), கனிட்ட தொழில்நுட்ப நிலையம், குருநாகல் (சிங்களம்) |
| 1. தொழிற் கற்கைகளிலான தேசிய தகுதித் தேர்வு | பகல் முழுநேர—2 வருடங்கள் | வயது : 1.1.74 அன்று 21 வயதுக்குக் குறைவாக விருத்தல் விரும்பற்பாலது. பரீட்சார்த்திகள் 17 வயதுக்குக் குறைவாக இருத்தலாகாது. ..<br>(i) பொருளியல், வாணிகவியலும் நிதியியலும், கணக்கியல் ஆகியவற்றுள் குறைந்த பட்சம் இரண்டும், மூன்றுவது பாடம் இவற்றுள் ஒன்றாக இல்லாதவிடத்து ஆட்சியியல், தூயகணிதம், புவியியல், தமிழ், சிங்களம், ஆங்கிலம், தர்க்க சாத்திரம், வரலாறு ஆகியவற்றுள் ஒன்றாகவும் க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி ; அல்லது<br>(ii) கணக்குப் பதிவாளர்க்கான வாணிக உயர்தராதரப் பத்திரம் ; அல்லது<br>(iii) கணக்குப் பதிவாளர்க்கான வாணிக வித்தியா சாதிக பத்திரம் ; அல்லது<br>(iv) கணக்குப் பதிவாளர்க்கான வர்த்தக தராதரப் பத்திரம். | (1) பொது விவேகம் ..<br>(2) எண்கணிதம் அல்லது வாணிக எண்கணிதம்<br>(3) கட்டுரை | தெகிவலை, காலி, கண்டி பல்தொழில்நுட்ப நிலையங்கள் (சிங்களம்), யாழ்ப்பாண பல்தொழில்நுட்ப நிலையம் (தமிழ்) |
| 3. ஆங்கிலத்திலான தேசிய தகுதித் தேர்வு | பகல் முழுநேர—2 வருடங்கள் | வயது : 7 ஆம் பயிற்சி நெறிக்குள்ளவாறு. ..<br>(1) க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில், மூன்று பாடங்களில் சித்தியுடன் க. பொ. த. (சா) பத்திரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் " அ " பாடத்திட்டத்தில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் சித்தி அல்லது ஆங்கில மொழியில் " ஆ " பாடத்திட்டத்தில் திறமைச் சித்தி | (1) பொது விவேகம் ..<br>(2) கட்டுரை (இவ்விரு பத்திரங்களுக்கும் ஆங்கில மொழி மூலம் விடை கொடுக்கவும்) | தெகிவலை பல்தொழில்நுட்ப நிலையம் |
| 1. தேசிய உயர்தர மதிப்பீட்டுத் தகுதித் தேர்வு | முழுநேர—இரண்டு வருடங்கள்<br>பகுதிநேர—இரண்டு வருடங்கள் | க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் கணிதத்தில் சித்தியுடன் அல்லது க. பொ. த. (சா) பத்திரப் பரீட்சையில் கணிதத்தில் திறைமைச் சித்தியுடன் க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் 2 பாடங்களில் சித்தி. ஆங்கில மொழிமூல பயிற்சி நெறிக்கு அனுமதிகோரும் பரீட்சார்த்திகள் க. பொ. த. (சா) பத்திரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தி அடைந்திருக்க வேண்டும்<br>வயது : 1.1.1974 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்கவேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) தூய கணிதம் | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (ஆங்கிலம்/சிங்களம்) |
| . தேசிய உயர்தர வர்த்தக தகுதித் தேர்வு | முழுநேர பகல்—4 வருடங்கள் | பின்வருவனவற்றுள் ஒன்று :—<br>(1) கணக்குப் பதிவியலாளருக்கான உயர்தர வர்த்தக தராதரப் பத்திரம்<br>(2) 4 பாடங்களுடன் க. பொ. த. (உயர்தர) பத்திரம்<br>(3) வாணிகவியல் ஆசிரியர்களுக்கான மகரகம ஆசிரியர் கலாசாலை பயிற்றப்பட்ட தராதரப் பத்திரம் ; அல்லது<br>(4) பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படும் வாணிகவியல் தராதரப் பத்திரம் (கணக்கியல் பத்திரப்) பரீட்சையில் சித்தி<br>ஆங்கில மொழிமூல பயிற்சி நெறிக்கு க. பொ. த. (சா) பத்திரப் பரீட்சையில் ஆங்கில மொழியிலான சித்தி தேவை<br>வயது : 1.1.1974 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்கவேண்டும் | (1) பொது விவேகம் ..<br>(2) எண்கணிதம் அல்லது வாணிக எண்கணிதம்<br>(3) கட்டுரை .. | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (ஆங்கிலம்/சிங்களம்) பல்தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம் (தமிழ்) பல்தொழில்நுட்ப நிறுவனங்கள் கண்டி, தெகிவலை (சிங்களம்) |

| பயிற்சிநெறி எண் | பயிற்சிநெறியின் பெயர் | பயிற்சி நெறித்தன்மை | தகவுத்திறன் தேவைகள் | புகுமுகப் பரீட்சைக்கு எடுக்க வேண்டிய பாடங்கள் | பயிற்சி நெறி நடைபெறும் நிலையங்கள் (போதனமொழி விபரத்துடன்) |
|---|---|---|---|---|---|
| 11. | தேசிய உயர்தர கணக்கியல் தகுதித் தேர்வு | மாலைநேர—4 வருடங்கள் .. | பின்வருவனவற்றுள் ஒன்று :—<br>(1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகப் பட்டம்<br>(2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக இடைமானிப் பரீட்சைச்சித்தி<br>(3) அப்பல்கலைக் கழகத்து பட்டப் பரீட்சைக்கு தோற்றுதற்கு உரித்தளிக்கும், க. பொ. த. (உயர்தர) லண்டன் பத்திரப் பரீட்சை சித்தி<br>(4) க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் 4 பாடங்களில் சித்தி<br>(5) இலங்கை மேற்றர பாடசாலைத் தராதரப் பத்திரம்<br>(6) கணக்குப் பதிவியலாளருக்கான உயர்தர வர்த்தக தராதரப் பத்திரம் ;அல்லது<br>(7) கனிட்ட பல்கலைக் கழகத்தின் (அல்லது பல்தொழில்நுட்ப நிறுவனத்தின்) இருவருட முழு நேர தகுதித் தேர்வு (டிப்புளோமா)<br>**குறிப்பு.**—கனிட்ட பல்கலைக் கழகத்தின் (அல்லது பல்தொழில் நுட்ப நிறுவனத்தின்) கணக்குப் பதிவியல், செலவினக் கணக்கியல் முறைகள், கணக்காய்வுப் பயிற்சி ஆகியவற்றில் தகுதித் தேர்வு (டிப்புளோமா) பெற்றவர்கள் முதலாமாண்டிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு, பயிற்சியின் இரண்டாம் வருட வகுப்பில் நேரடியாக அனுமதிக்கப்படுவர்<br>ஆங்கில மொழிமூல வகுப்பைப் பின்பற்றுபவருக்கு சி பா. த. ப. அல்லது க. பொ. த. (சா) பத்திர பரீட்சையில் ஆங்கில மொழியிலான சித்தி தேவை.<br>வயது : 1.1.1974 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும்<br>**மு. கு.**—செயல்முறை அனுபவம்—அங்கீகரிக்கப்பட்ட ஒரு வியாபார ஸ்தாபனத்தில் அல்லது அரசாங்க அதிகார சபையில் அல்லது நிலையத்தில் வேலைக்கமர்த்தப்பட்டிருப்பதுடன் கணக்கீடு, கணக்குப் பரிசோதனை அல்லது தொடர்புபட்ட தன்மையதான வேலையில் ஈடுபட்டிருக்க வேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) எண்கணிதம் அல்லது வாணிக எண்கணிதம்<br>(3) கட்டுரை .. | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (ஆங்கிலம்/சிங்களம்/தமிழ்) பல்தொழில்நுட்ப நிறுவனங்கள் கண்டி, தெகிவலை (சிங்களம்) பல்தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம் (தமிழ்) |
| 12. | செயலாண்மை உயர்தொழில் பயிற்சி நெறி | 1. பகல் முழுநேர—4 வருடங்கள்<br>2. மாலை பகுதிநேர—4 வருடங்கள் | பின்வருவனவற்றுள் ஒன்று :— ..<br>1. லண்டன் மற்றிக்குலேசன் .. ..<br>2. இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி அங்கீகரிக்கப்பட்ட 6 பாடங்களில் இலங்கைக் க. பொ. த. (சா) பத்திரப் பரீட்சையில் சித்தி அடைந்திருப்பதுடன் ஆங்கிலம், கணிதம் அல்லது இயற்கை விஞ்ஞானம் ஆகியவை உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்திகள் பெற்றிருக்க வேண்டும். குறித்த திறமைச் சித்திகளுள் நான்கேனும் ஒரே தோற்றத்தில் பெற்றிருக்கப்பட வேண்டும். .. ..<br>வயது—1.1.1974 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். .. .. .. | 11 ஆம் பயிற்சி நெறிக்குள்ளவாறு | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (ஆங்கிலம்) |
| 13. | வங்கிமுறை உயர்தொழில் பயிற்சி நெறி .. | மாலைநேர—மூன்று வருடங்கள் .. | ஆங்கில மொழியிலும் கணிதம், எண்கணிதம், வர்த்தக எண்கணிதம் ஆகியவற்றில் எதிலேனும் சித்தியுடன் இலங்கை சி.பா.த. (ஆங்கிலம்) பத்திரம். அல்லது இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி ஆங்கில மொழியிலும் கணிதம், எண்கணிதம், வர்த்தக எண்கணிதம் ஆகியவற்றில் எதிலேனும் சித்தியுடன் க. பொ. த. (சா) பத்திரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி.<br>**மு.கு.**—லண்டன் வங்கியாளர்கள் நிலையத்தின் ஒரு மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட அட்டவணையிலுள்ள ஒரு வங்கியில் வேலை செய்பவராக இருக்க வேண்டும். –<br>வயது : 1.1.1974 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | ஷை .. | ஷை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14. | செலவினக் கணக்கியல் உயர் தொழில பயிற்சிநெறி | 1. பகல் முழுநேர—3 வருடங்கள்<br>2. மாலை பகுதிநேர—3 வருடங்கள் .. | பின்வருவனவற்றுள் ஒன்று— .. ..<br>1. கணிதத்தை ஒரு பாடமாகக் கொண்டு சி. பா. த. (ஆங்கில) .. பத்திரம்.<br>இரு தடவைக்கு மேற்படாது தோற்றி கணிதத்திலும் ஆங்கிலத்திலும் திறமைச் சித்திகளுடன் க. பொ. த. (சா) பத்திரம்.<br>3. செலவின, வேலைக் கணக்காளர் நிலையத்தில் மாணவரா யிருத்தல்.<br>வயது : 1.1.1974 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | ஷை .. | ஷை |
| 15. | தொழிற் கற்கைகளிலான தேசிய தராதரப்பத்திரம் | பகல் முழுநேர—ஒரு வருடம் .. | இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி கணிதம், எண்கணிதம் வர்த்தக எண்கணிதம் ஆகியவற்றுள் ஒன்றும் சிங்கள மொழியும் (சிங்கள மொழி மூலப் பரீட்சார்த்திகளுக்கு) தமிழ் மொழியும் (தமிழ் மொழி மூலப் பரீட்சார்த்திகளுக்கு) ஆங்கில மொழியும் (ஆங்கில மொழி மூலப் பரீட்சார்த்திகளுக்கு) உட்பட க. பொ. த. (சா) பத்திரம்.<br>வயது : 1.1.1974 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) எண்கணிதம் அல்லது வாணிக எண்கணிதம்<br>(3) கட்டுரை (பரீட்சார்த்திகள் தமது சொந்த மொழிமூலம் இதற்குத் தோற்றவேண்டும்.) | பல்தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம் (தமிழ்) பல்தொழில்நுட்ப நிலையங்கள் காலி, கண்டி, (சிங்களம்) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி மருதானை (சிங்களம்/ஆங்கிலம்) கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள் பதுளை, கேகாலை, குருநாகல் (சிங்களம்) |
| 16. | ஷை .. | மாலைநேர—ஒரு வருடம் (அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில் நிலையத்தில் அல்லது அரசாங்க திணைக்களத்தில் அல்லது ஸ்தல அதிகார சபையில் அல்லது வேறு யாதேனும் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் தொழில் புரிபவர்களுக்கு மட்டுமே) | 15 ஆம் இலக்கப் பயிற்சி நெறிக்கமைவதுபோல ..<br>வயது : 1.11974 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | ஷை .. | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி மருதானை (சிங்களம்/ஆங்கிலம்) பல்தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம் (தமிழ்) பல்தொழில்நுட்ப நிறுவனம் காலி, கண்டி. (சிங்களம்) கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள் பதுளை, கேகாலை, குருநாகல் (சிங்களம்) |
| 17. | விற்பனையியலும் விற்பனை முகாமையும் தராதரப் பத்திரம் | ஒரு வருடம்—சனிக்கிழமைகளில் மாத்திரம் (பின்னேரங்களில்) (விற்பனை முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரம்) | இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி சிங்கள/ஆங்கில மொழி உட்பட (சிங்கள மொழி மூலம் மாணவர்களுக்கு சிங்களமும் ஆங்கில மொழிமூல மாணவர்களுக்கு ஆங்கிலமும்) க. பொ. த. (சா) பத்திரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி<br>வயது : 1.1.1974 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) கட்டுரை (பரீட்சார்த்திகள் தமது சொந்த மொழிமூலம் இதற்குத் தோற்ற வேண்டும்) | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை, (ஆங்கிலம்/சிங்களம்) |
| 18. | சுருக்கெழுத்தாளர் தராதரப் பத்திரம் | பகல்நேர—ஒரு வருடம் .. | 17 ஆம் இலக்கப் பயிற்சி நெறிக்கு அமைவது போல. தமிழ் மொழி மூல மாணவர்கள் க. பொ. த. (சா) பத்திரப் பரீட்சையில் தமிழ் மொழியில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.<br>வயது : 1.1.1974 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | 17 ஆம் பயிற்சி நெறிக்கு அமைவதுபோல. தமிழ் மொழி மூல மாணவர்கள் இதற்கு தமிழ் மொழியில் தோற்ற வேண்டும். | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை, (ஆங்கிலம்/சிங்களம்) பல்தொழில்நுட்ப நிறுவனங்கள் யாழ்ப்பாணம் (தமிழ்) தெஹிவளை (சிங்களம்) |

| பயிற்சிநெறி எண் | பயிற்சிநெறியின் பெயர் | பயிற்சி நெறித்தன்மை | தகவுத்திறன் தேவைகள் | புகுமுகப் பரீட்சைக்கு எடுக்க வேண்டிய பாடங்கள் | பயிற்சி நெறி நடைபெறும் நிலையங்கள் (போதனமொழி விபரத்துடன்) |
|---|---|---|---|---|---|
| 19. | சுருக்கெழுத்தாளர் தராதரப் பத்திரம் | மாலைநேர—ஒரு வருடம் (இத்துறையில் அல்லது இத்துறையுடன் தொடர்புபட்ட துறையில் கடமை புரிபவர்களுக்கு மாத்திரம்) | இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி (சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி) (முறையே சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி மூல மாணவர்களுக்கு) உட்பட க. பொ. த. (சா) பத்திரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி.<br>வயது : 1.1.1974 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) கட்டுரை (பரீட்சார்த்திகள் தமது சொந்தமொழி மூலம் இதற்குத் தோற்றவேண்டும்) | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்/ஆங்கிலம்) பல்தொழில்நுட்ப நிறுவனங்கள், யாழ்ப்பாணம் (தமிழ்), கண்டி (சிங்களம்) |
| 20. | ஆரம்ப எந்திரவியல் விஞ்ஞானம் | மாலைநேர—ஒரு வருடம் .. .. | 8 ஆந் தரம் அல்லது 8 ஆம் வகுப்பு அல்லது கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம்.<br>வயது : 1.1.1974 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) ஆரம்ப கணிதம் .. | பல்தொழில்நுட்ப நிறுவனங்கள், யாழ்ப்பாணம் (தமிழ்) கண்டி (சிங்களம்), கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள் அனுராதபுரம், பதுளை, கேகாலை, குருநாகல், காலி, இரத்மலானை (சிங்களம்). |
| **தேசிய கைப்பணித் தராதரப் பத்திரங்கள்** | | | | | |
| 21. | பொறிப்படுத்தல் .. | பகல் முழுநேர—2 வருடங்கள் .. | 8 ஆந் தரம் அல்லது 8 ஆம் வகுப்பு ..<br>வயது : 1.1.1974 அன்று 18 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும். | (1) பொறிமுறை பற்றிய பொது அறிவு<br>(2) தொழில்களுக்கான எண்கணிதம் | (21), (22), (23), (24), (26) ஆம் இலக்கப் பயிற்சி நெறிகள் காலி, கண்டி, பல்தொழில்நுட்ப நிறுவனங்களில் (சிங்கள மொழி மூலமும்) யாழ்ப்பாணம் பல்தொழில்நுட்ப நிறுவனத்தில் (தமிழ் மொழி மூலமும்) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்). கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள் அனுராதபுரம், பதுளை, கேகாலை, குருநாகல், இரத்மலானை (சிங்களம்).<br>(25) ஆம் இலக்கப் பயிற்சி நெறி தொழில் நுட்பக் கல்லூரி—மருதானை (சிங்களம்) அனுராதபுரம், குருநாகல், இரத்மலானை, கனிட்ட தொழில்நுட்ப நிலையங்களிலும் (சிங்கள மொழி மூலம்) பல்தொழில் நுட்ப நிறுவனம், காலி (சிங்களம்). (27), (28) ஆம் இலக்கப் பயிற்சி நெறிகள் இரத்மலானை கனிட்ட தொழில்நுட்ப நிலையத்தில் சிங்கள மொழி மூலமும் (29) ஆம் இலக்கப் பயிற்சி நெறி இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் (மருதானை) சிங்கள மொழி மூலமும் யாழ்ப்பாண பல்தொழில்நுட்ப நிறுவனத்தில் தமிழ் மொழி மூலமும் நடைபெறும். |
| 22. | தன்னியக்கப் பொறியியல் .. | ஷை .. .. | ஷை .. .. | | |
| 23. | தச்சுவேலையும் மூட்டு வேலையும் .. | ஷை .. .. | ஷை .. .. .. | | |
| 24. | கட்டங்களில் மின்சார இணைப்புகள் | ஷை .. .. | ஷை .. .. .. | | |
| 25. | கட்டடத் தொழில் .. | ஷை .. .. | ஷை .. .. .. | | |
| 26. | பொருத்துதல் .. | ஷை .. .. | ஷை .. .. .. | | |
| 27. | லோகத் தகட்டு வேலை .. | ஷை .. .. | ஷை .. .. .. | | |
| 28. | மின்சாரப் பொறியியல் .. | ஷை .. .. | ஷை .. .. .. | | |
| 29. | வானொலிப் பொறியியலும் இலத்திரனியலும் .. | ஷை .. .. | ஷை .. .. | | |
| 30. | நீர்க்குழாய்த் தொழில் தராதரப் பத்திரம் | பகுதிநேர—ஒரு வருடம் (இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரம்) | 8 ஆந் தரம் அல்லது 8 ஆம் வகுப்பு அல்லது கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம். (அரசினர் அல்லது ஸ்தல ஆட்சிச் சபைச் சேவையில் உள்ளவர்களுக்கு இத்தேவையிலிருந்து தவிர்வு அளிக்கப்படலாம்.)<br>வயது : 1.1.1974 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | (1) பொது எந்திரவியல்<br>(2) தொழில்களுக்கான எண்கணிதம் | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்) பல்தொழில்நுட்ப நிறுவனம் யாழ்ப்பாணம் (தமிழ்), கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள், அனுராதபுரம், குருநாகல், பதுளை (சிங்களம்) கண்டி (சிங்களம்). |
| 31. | கைக்கடிகாரம் பழுதுபார்த்தல் தராதரப் பத்திரம் .. | ஷை .. .. | ஷை .. .. .. | ஷை .. | பல்தொழில்நுட்ப நிறுவனம், கண்டி (சிங்களம்) |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 32. வானொலி பேணல் தராதரப் பத்திரம் .. .. | ஷை | .. | .. | ஷை | .. | .. | | ஷை | .. | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்) பல்தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம் (தமிழ்), பல்தொழில்நுட்ப நிறுவனம், கண்டி (சிங்களம்) கனிட்ட தொழில் நுட்ப நிலையங்கள், அனுராதபுரம், கேகாலை, குருநாகல் (சிங்களம்) |
| 33. மின்சாரக் கம்பி இணைப்புத் தராதரப் பத்திரம் .. | ஷை | .. | .. | ஷை | .. | .. | .. | ஷை | .. | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை, ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையம், அம்பாறை, கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள் அனுராதபுரம், பதுளை, கேகாலை, குருநாகல் (சிங்களம்), பல்தொழில் நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம் (தமிழ்) பல்தொழில்நுட்ப நிறுவனம் காலி (சிங்களம்). |
| 34. கோர்த்தல் தராதரப் பத்திரம் .. | பகுதிநேர மாலை—3 வருடங்கள் (இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரமே) | | | ஷை | .. | .. | .. | ஷை | .. | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்). |
| 35. லெற்றர் பிறெஸ் எந்திரவியல் வேலைத் தராதரப்பத்திரம் | ஷை | .. | .. | ஷை | .. | .. | .. | ஷை | .. | ஷை |
| 36. புத்தகம் கட்டும் வேலைத் தராதரப் பத்திரம் | ஷை | .. | .. | ஷை | .. | .. | .. | ஷை | .. | ஷை |
| 37. தச்சு வரைதல் தராதரப் பத்திரம் | ஷை | .. | .. | ஷை | .. | .. | .. | ஷை | .. | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்) பல்தொழில்நுட்ப நிறுவனம், கண்டி (சிங்களம்), கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள் அனுராதபுரம், பதுளை, |
| 38. பொருத்துதல் தராதரப் பத்திரம் | ஷை | .. | .. | ஷை | | .. | .. | ஷை | .. | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை, கனிட்ட தொழில்நுட்ப நிலையம் குருநாகல் (சிங்களம்) பல்தொழில் நுட்ப நிறுவனங்கள், யாழ்ப்பாணம் (தமிழ்), கண்டி (சிங்களம்) |
| 39. பொறிப்படுத்தல் தராதரப் பத்திரம் | ஷை | .. | .. | ஷை | .. | .. | .. | ஷை | .. | இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம்) பல்தொழில் நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம் (தமிழ்) கனிட்டதொழில் நுட்ப நிறுவனம், கண்டி (சிங்களம்) |

2–289—09.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46

### கமத்தொழிற்றிணைக்களம்

கமத்தொழிற்சாதனை பாடசாலைகளை—பயிற்சி நெறிகள் 1973/74

இதன்கீழ் உள்ள நிரலில் உள்ள கம சாதனைபாடசாலைகளில் 1973/74 ம வருடத்துக்குரிய அவற்றின் கல்விப் பயிற்சி நெறிகள் 1973 ம் ஆண்டு மே மாதம் 02 ம் திகதி ஆரம்பமாகும். இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கவிருக்கும் விண்ணப்பதாரிகள் இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டிருக்கும் மாதிரிப் படிவம் போல விண்ணப்பங்களை தயாரித்து தாம் வதியும் மாவட்டத்திற்குரிய மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தருக்கு 1973 ம் ஆண்டு மாச் மாதம் 5 ம் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

கம சாதனை பாடசாலைகளில் அளிக்கப்படும் பயிற்சி நெறிகள் கமத்தொழிலை சீவனுதாரமாகக் கைக்கொள்ளத்தீர்மானித்துள்ள மாணவ மாணவிகட்கு முக்கியமானவை. பயிற்சி நெறிகளை நிறைவேற்றும் மாணவர்களுக்கு இலங்கை அரசாங்கம் வேலை அளித்தலை உறுதிப்படுத்தவோ, வேலைவாய்ப்பு எதனையும் எடுத்துத்தருவதாக வாக்குறுதி அளிக்கவோ இல்லை என்பதை விண்ணப்பதாரர் பூரணமாக உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளை உடையவராய் இருத்தல் வேண்டும்.

(1) 1973 ம் ஆண்டு மே மாதம் 2 ம் திகதியில் 17 வயதிற்கும் 24 வயதிற்கும் இடையினராய் இருத்தல் வேண்டும்.

(2) க. பொ. த. பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, எண் கணிதம்/கணிதம் ஆகிய பாடங்களுடன் மேலும் நான்கு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(3) விவாகம் செய்யாதவராக இருத்தல் வேண்டும்.

க. பொ. த. பரீட்சையில் விவசாயப்பாடத்திலும் மற்றும் விஞ்ஞான பாடங்களிலும் சித்தி எய்திய இளைஞர், விவசாயக்கழகங்களில் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுள்ள, பயிற்சி முடிந்தவுடன் கமத்தொழிலில் ஈடுபட வாய்ப்பும் சந்தர்ப்பமும் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும். இளைஞர் விவசாயக் கழக உறுப்பினர் நேர்முகப்பரீட்சையின் போது உரிய வட்டாரக் கமத்தொழிற் போதனைசிரியரால் சான்றுபடுத்தப்பட்ட தொழிற் பதிவேடுகளைச் சமர்பித்தல் வேண்டும்.

| ஆடவர் பாடசாலை. | போதனை மொழி |
|---|---|
| 1. பெல்வெகர | சிங்களம் |
| 2. அம்பேபுஸ்ச | „ |
| 3. வாரியப்பொல | „ |
| 4. பிபில | „ |
| 5. கிளிநொச்சி | தமிழ் |
| 6. வவுனியா | „ |

| மகளிர் பாடசாலை | |
|---|---|
| 1. வல்பிட்ட | சிங்களம் |
| 2. திருநெல்வேலி. | தமிழ் |

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் அவர்கள் வசிக்கும் பிரதேசத்தில் காலநிலையும் விவசாயமும் உள்ள சூழலில் பாடசாலைகளில் அனுமதிக்கப்படுவர்.

தேர்ந்தெடுக்கப்படும் எல்லா பெண் சிங்கள விண்ணப்பதாரிகளும் வல்பிட்டவிலும், எல்லா தமிழ் விண்ணப்பதாரிகளும் திருநெல்வேலியிலும் அனுமதிக்கப்படுவர்.

இ. அபேரத்ன,
கமத்தொழிற் பிரதிப்பணிப்பாளர்.
(விசாலிப்பு)

கமத்தொழிற்றிணைக்களம்,
பேராதனை,
1973 ஜனவரி 29 திகதி

### விண்ணப்பப் படிவம்

.............................ஆடவர்/மகளிர் சாதனை கமப்பாடசாலையில் சேருவதற்கான விண்ணப்பம்—1973/74

1. (அ) விண்ணப்பதாரரின் பெயரும் விலாசமும் :————.
   (ஆ) விண்ணப்பதாரர் நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் : ————.
2. (அ) பிறந்த திகதி :————.
   (ஆ) 2.5.73 ல் வயது :————.
3. (அ) பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் விலாசம் : ————.
   (ஆ) அன்னாரின் தொழில் :————.
4. பெற்றோரின் அல்லது பாதுகாவலரிடமுள்ள நிலப்பரப்பு.
   (அ) மேட்டு நிலம் (ஏக்கர்) :————.
   (ஆ) வயல் நிலம் (ஏக்கர்) :————.
   (நிலச் சொத்துரிமையை அத்தாட்சிப்படுத்த கிராம சேவகரின் சான்றிதழ் இணைத்தல் வேண்டும்.)
5. சகோதர/சகோதரிகள் எத்தனை ? :————.
6. கடைசியாகச் சித்தியடைந்த பரீட்சை :————.
7. சித்தியடைந்த பாடங்கள் :————.
   (அ) ————.
   (ஆ) ————.
   (இ) ————.
   (ஈ) ————.
   (உ) ————.
   (ஊ) ————.
   (எ) ————.
   (ஏ) ————.
8. கடைசியாகப் படித்த பாடசாலை :————.
9. விண்ணப்பகாரர் ஈடுபட்டிருந்த பாட திட்டங்களில் அமையாத சேவைகள் :————.
   (கடைசியாகப் படித்த பாடசாலையின் அதிபரிடமும் மற்றும் இருவரிடமும் பெற்றுள்ள நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகளை இணைக்குக.)
10. இளைஞர் விவசாயக்கழக உறுப்பினரா ? அப்படியானல் உமது கழகத்தின் பெயரையும் விலாசத்தையும் அதன் பதிவிலக்கத்தையும் கூறுக :————.
11. இளைஞர் விவசாயக்கழக உறுப்பினராக இருந்து கைக்கொண்ட முயற்சிகளையும் திட்டங்களையும் கூறுக : ————.
12. கமத்தொழிற் செய்கையில் அனுபவம் உண்டா ? :————.
13. விவசாயப் பயிற்சி பெற்றுக்கொள்ள ஆதாரமாயுள்ள பிற தன்மைகளைக் கூறுக :————.

மேலே கூறப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

————.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

2-347—09.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| சனவரி | 5.1.73 | வெள்ளி | 27.12.72 | புதன் | ந.ப. 12.00 |
| | 12.1.73 | வெள்ளி | 3.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 19.1.73 | வெள்ளி | 10.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 26.1.73 | வெள்ளி | 17.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| பெப்புருவரி | 2.2.73 | வெள்ளி | 24.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 9.2.73 | வெள்ளி | 31.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 15.2.73 | வியாழன் | 7.2.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 23.2.73 | வெள்ளி | 14.2.73 | புதன் | ந.ப. 12.00 |
| மாச்சு | 2.3.73 | வெள்ளி | 21.2.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 9.3.73 | வெள்ளி | 28.2.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 16.3.73 | வெள்ளி | 7.3.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 23.3.73 | வெள்ளி | 14.3.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 30.3.73 | வெள்ளி | 21.3.73 | புதன் | ந.ப. 12.00 |
| ஏப்பிறில் | 6.4.73 | வெள்ளி | 28.3.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 11.4.73 | புதன் | 4.4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 19.4.73 | வியாழன் | 11.4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 27.4.73 | வெள்ளி | 18.4.73 | புதன் | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.